



# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ–பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
மலர் – 7 இதழ் – 1, ஜனவரி– பிப்ரவரி 2021

R5205

## Making Friends with Mammon
## உலகப் பொருட்களினால் நண்பர்களை ஏற்படுத்துதல்

*ஆதியாகமம் 33:1–15*

*''ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். '' எபேசியர் 4:32*

''அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரை சம்பாதியுங்கள் '' என்று கூறி மாபெரும் போதகர் தம்முடைய சீஷர்களை அறிவுறுத்தினர். வேறு வார்த்தைகளில் சொல்லுவோமானால், அவரது சீஷர்கள் சுயநலமுள்ளவர்களாகவோ, வெறுப்புணர்ச்சி உடையவர்களாகவோ அல்லது கடைசி பணம் வரை நிர்ப்பந்திக்கிறவர்களாகவோ இருக்கக்கூடாது. அவர்கள் பெருந்தன்மை உடையவர்களாக நட்பை உறுதிப்படுத்த வேண்டும். இல்லை –யென்றால் அவர்கள் இவர்களை வெறுப்பார்கள். அதாவது இயேசுவின் சீஷர்கள் பூமிக்குரிய காரியங்களில் அக்கறை காட்டாமல் பரத்துக்குரிய காரியங்களில் அக்கறை காட்ட வேண்டும். பரலோகத்துக்குரிய நன்மைகளை உயர்த்தக் கூடுமென்றால் பூமிக்குரிய காரியங்களில் மற்றவர்கள் பயன்பெற நாம் அனுமதிக்க வேண்டும். இன்றைய பாடத்தில் இதுதான் நன்றாக விளக்கப்படுகிறது.

**தேவனுடைய சலுகைக்காக அனைத்தையும் விட்டுவிடுதல்**

கடந்த பாடத்தில் யாக்கோபு, ஆபிரகாமுடன் செய்து, ஈசாக்குடனும் பிறகு தன்னுடனும் உறுதிப்பண்ணப்பட்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை மட்டும் தனது உரிமையாக்கிக் கொண்டு, ஆபிரகாம் மற்றும் ஈசாக்கின் பூமிக்குரிய சொத்துக்கள் அனைத்தையும் ஏசாவிடம் எப்படி விருப்பத்துடனும் சந்தோஷத்துடனும் விட்டுக்கொடுத்தார் என்பதை நாம் பார்த்தோம். அந்த வாக்குத்தத்தம் தற்காலத்திற்குரியது அல்ல, எதிர்காலத்திற்குரியது. அது விசுவாசத்திற்குரியதாக இருந்தது. எதிர்கால வாக்குத்தத்தத்துக்காக ஏசா என்ன கவலை கொண்டான்? அவன் பூமிக்குரிய சுதந்தரங்களை விரும்பி பெற்றான். ''உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும் '' என்கிற உடன்படிக்கையைப் பற்றி, ஏசா தான் பூமிக்குரிய சொத்துக்களை சுதந்தரித்துக் கொண்ட பிறகு, அவன் நினைத்துப் பார்த்தது குறித்து நாம் எங்கேயும் காணவில்லை.

ஆனால் யாக்கோபின் மனதில் இந்த உடன்படிக்கையானது எப்பொழுதும் இருந்துகொண்டேயிருந்தது. ஆனால் அவர் விலை கொடுத்து வாங்கிய சேஷ்ட புத்திர பாகத்தில் பூமிக்குரிய ஆசீர்வாதமும் உள்ளடங்கியிருந்தாலும், அதற்காக அவர் ஏசாவிடம் சண்டையிடவில்லை. இந்த மாபெரும் எதிர்கால ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொண்டால் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்தையும் ஏசாவிடம் கொடுப்பார். வாழ்க்கையில் யாக்கோபின் மார்க்கம் முழுவதும் இந்த மாபெரும் வாக்குத்தத்தத்தால் நிர்வகிக்கப்பட்டது. ஆசீர்வதிக்கிற சந்ததி இவர் மூலமாக வரவேண்டும் என்றால், அவர் குழந்தைகளைப் பெற வேண்டும். ஆகையால் அவர் திருமணம் செய்து நல்ல ஒரு குடும்பத்தை ஏற்படுத்தினார். அவர்கள் அனைவரும் ஆதி உடன்படிக்கையில் அவரோடு கூட குறிக்கப்பட்டிருந்தார்கள். அவர் சேர்த்த சொத்து ஆட்டு மந்தைகள் எல்லாம் இதே வழியிலேயே இருந்தன. உயர்ந்தவனாக வேண்டும் என்ற விருப்பம் அந்த வாக்குத்தத்தத்திற்கு ஒத்த நிலையில் இருந்தது.

கர்த்தரின் வழிநடத்துதலின் கீழ், தன்னுடைய மாமா லாபான் வீட்டிலிருந்து தான் படிப்படியாக அங்கே சம்பாதித்த ஆட்டு மந்தைகள், வேலைக்காரர்கள் ஆகியவற்றுடன் புறப்பட்டார். அவர் தெய்வீகவழி நடத்துதலின் கீழ் தனது தகப்பனாரின் தேசத்துக்கு சென்றார். அவர் தனது வீட்டை விட்டு இருபது வருடங்கள் ஆகிவிட்டன. அவருக்கு தனது சகோதரன் ஏசாவைப் பற்றிய பயம் இருந்தது. இவர் நம்பியிருந்த வாக்குத்தத்தத்தை கர்த்தரிடம் ஞாபகப்படுத்தி, இந்த காரியத்தைக் குறித்து ஜெபித்தார்.

பிறகு தான் வந்து கொண்டிருப்பதைக் குறித்து தனது சகோதரன் ஏசாவுக்கு சொல்லியனுப்பினார். ஏசாவுக்கு வெகுமதியளிக்க, அந்த காலத்தில் அதிக மதிப்புள்ள இருநூற்று இருபது ஆடுகளும், இருநூற்று இருபது செம்மறியாடுகளும் அறுபது ஒட்டகங்கள், ஐம்பது கால்நடைகள் மற்றும் முப்பது கழுதைகளையும் தனது வேலைக்காரர்களுடன் தயார்படுத்தினார். அவரது மந்தைகளும் கால்நடைகளும் எவ்வளவு மதிப்புடையது என்பதை நாம் அறியோம். ஆனால் அவையனைத்தும் யாக்கோபின் நீண்ட நாட்களின் உழைப்பாகும். அவைகளெல்லாம் பூமிக்குரியதாக, தற்காலத்திற் –குரியவைகளாக இருந்தன. ஆனல் அவர் பெற்றிருந்த மாபெரும் வாக்குத்தத்தத்தைக் காட்டிலும் யாக்கோபு இதை பெரிதாக மதிக்கவில்லை. ஏசாவிடம் நல்ல பெயர் வாங்க, அவனது தயவை பெற தனது உலக பொருட்களை ஏசாவுக்கு நன்கொடையாகக் கொடுத்தார். ஆனால் ஏசாவுக்கு கொடுக்க வேண்டிய கடமை ஏதுமில்லை. ஏசாதான் கடமைக்குட்பட்டிருந்தான்.

**யாக்கோபின் மார்க்கத்தின் ஞானம்**

சில நிமிடங்கள் இளையவனான யாக்கோபு தனது மூத்த இரட்டை சகோதரன் ஏசாவின் சேஷ்ட புத்திர பாகத்தை வாங்கியிருந்தார். அது ஈசாக்கின் அதிகப்படியான சொத்தை உள்ளடக்கியிருந்தது. யாக்கோபு இதையெல்லாவற்றையும் தனது சகோதரன் ஏசாவிடம் விட்டுச் சென்றிருந்தார். யாக்கோபு தனது சொத்தை திரும்ப பெற இப்பொழுது வந்து கொண்டிருக்கிறான் என்று ஏசா நினைப்பது இயற்கையானது.

ஏசா அதற்காக நிச்சயமாக சண்டையிட தயாராயிருந்தான். சொத்தில் உரிமைகோர மாட்டேன் என்று யாக்கோபு உறுதியளித்தாலும். ஏசா தனது சொந்த நிலையின்படி தொடர்ந்து தீர்மானித்து, யாக்கோபு ஒரு சந்தர்ப்பத்தில் தன்னை தாக்குவான் என்று அவநம்பிக்கை கொண்டிருந்திருப்பான். இந்த இரு குடும்பத்தாரிடையே உள்ள ஒரு போட்டியினால் ஒரு பகைமை ஏற்பட்டிருக்கும். இப்படிப்பட்ட ஒரு பகைமை ஆபிரகாமின் வாக்குத்தத்துடனான யாக்கோபின் நம்பிக்கைகளை வெகுவாக பாதித்திருக்கும். அவர் தன்னுடைய சந்ததியை ஏற்படுத்தி பெருகப்பண்ணவும் ஏற்ற காலத்தில் பூமியின் சகல வம்சங்களையும் ஆசீர்வதிப்பதற்கு தகுதிபடுத்தவும் தேவனுடன் அவர் உடன் ஊழியனாக இருக்க வேண்டும்.

யாக்கோபு தன்னுடைய வெகுமதிகளை ஏசாவிடம் கொடுத்தது மாத்திரமின்றி, அதை பெற்றுக்கொள்ளும்படி பலவந்தப்படுத்தினார். இது அவர்களுக்கிடையே ஒரு நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய ஒரு உறுதிமொழியாக இருந்திருக்க வேண்டும். இது பழைய புண்களை ஆறப்பண்ண உதவி பண்ணியிருக்கும். ஏசா எல்லாவற்றையும் விட தனது சகோதரனின் செல்வ செழிப்பை பார்க்க விரும்பியிருப்பான். ஏனெனில் அவன் யாக்கோபின் அதிகப்படியான சொத்தை தான் பெற்றிருந்ததை உணர்ந்தான். முதலாவது குடும்ப சொத்தை பெற்றிருந்தான். இரண்டாவது தற்போது கூடுதலாக பெற்றுக்கொண்டவைகள்.

முடிவாக யாக்கோபின் மார்க்கம் மிகவும் ஞானமானதாக இருந்தது. இன்னும் அதிகமான சொத்து அவருக்கு இருந்தது. இன்னும் தேவனுடைய விருப்பத்தின்படி இன்னும் அதிகமான ஆடுகளையும், செம்மறியாடுகளையும, கால்நடைகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும், தேவன் அவருக்கு கொடுக்கக் –கூடும். அவரது பிரதானமான அக்கறையெல்லாம் மாபெரும் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தைப் பற்றிய காரியங்களை முன்னேற்றுவதுதான். இதில் அவர் மிகவும் பிரியமுள்ளவராக இருந்தார். இதை நிறைவேற்றுதல் தற்கால வாழ்க்கைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

## பெருந்தன்மையின் பாடம்

யாக்கோபின் அனுபவத்திலிருந்து கிறிஸ்தவர்களாக நாம் உலகத்தின் மீதும் பரலோக வாக்குத்தத்தத்தில் ஆர்வம் இல்லாதவர்கள் மீதும் பெருந்தன்மையை காண்பிக்கும் பாடத்தை பெறலாம். கிறிஸ்தவ நடக்கைகளுக்கு யாக்கோபை ஒரு மாதிரியாக வைத்து யாக்கோபுக்கும் நமக்கும் ஒப்பிட்டு பார்க்கும் பொருளில் இதை நாம் கூறவில்லை. முற்றிலும் மாறாக யாக்கோபின் விசுவாசம் நாம் பின்பற்றக்கூடியதாக இருந்தாலும் அவர் தேவனுடன் நிற்பது நம்முடையதைக் காட்டிலும் மிகவும் வேறானது. அவர் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் ஒரு வாரிசாக இருக்கும் பொழுது, கிறிஸ்தவ சபையும் அதன் வாரிசாக இருக்கிறார்கள். நமது சுதந்தரம் வேறானது.

ஆபிரகாமின் வாக்குத்தத்தம் இரண்டு விதமான நிறைவேறுதல்களை உடையதாக இருக்கிறது என்பதை நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். பூமிக்குரிய நிறைவேறுதல் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு, மற்றும் அனைத்து விசுவாசிகளுக்கும் வர வேண்டியதாக இருக்கிறது. ஆனால் உயர்ந்த பரலோக நிறைவேறுதல் கிறிஸ்துவுக்கும், இந்த சுவிசேஷ யுகத்தின் உண்மை கிறிஸ்தவர்களாகிய, ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களுக்கும் உரியது. பெந்தெகொஸ்தே நாளிலிருந்து ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் மட்டுமே, கிறிஸ்துவின் பள்ளியின் ஆசீர்வாதமான சலுகைகளை அனுபவித்திருக்கிறார்கள். அல்லது பரிசுத்த ஆவியின் கிருபைகளையும் கனிகளையும் அபிவிருத்தி அடையப் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

எனினும் பொதுவான கொள்கை அந்த வாக்குத்தத்தத்தின் ஆவிக்குரிய மற்றும் மாம்சீக வாரிசுகளுக்கு பொருந்தக்கூடியதாக இருக்கிறது. அதாவது வாக்குத்தத்தத்தின் மேலுள்ள விசுவாசமானது இந்த பூமிக்குரிய வாழ்க்கைக்குரிய அனைத்தையும் இரண்டாம் பட்சமாக ஆக்குகிறது. எனவே யாக்கோபு, இலட்சியங்கள், இலக்குகள், நம்பிக்கைகள் மற்றும் அன்பு ஆகிய அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு, இந்த ஆபிரகாமிய வாக்குத்தத்தம் நிறைவேறுதலையும் பூமிக்குரிய உரிமைகளையும் சலுகைகளையும் அர்ப்பணிப்பதை மட்டுமே பார்த்தார். ஆவிக்குரிய வாரிசுகளாகிய நாமும் இதே போல இருக்க வேண்டும். ஆம் இதற்கு மேலாக இருக்க வேண்டும். எல்லா வகைகளிலும் நமக்கு அதிகமான அனுகூலம் இருக்கிறது. நம் அவர்களைக் காட்டிலும் இன்னும் மேன்மையாக வாக்குத்தத்தத்தை புரிந்து கொள்ள முடியும்.

தேவன் மனுக்குலத்தை மீட்பதற்காக தமது குமாரனை அனுப்பி அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கான ஏற்பாடுகளை முன்னரே எப்படி தேவன் ஆரம்பித்திருக்கிறார் என்பதை நாம் பார்க்கிறோம். இப்படியாக ஏற்ற காலத்தில் பூமியின் சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கபடும்படியாக செய்கிறார். இயேசு மனுக்குலத்தை மீட்ட பிறகு மிகவும் உயர்த்தப்பட்டு இப்பொழுது மாபெரும் மகிமையிலும் வல்லமையிலும் இருந்துகொண்டு, அவரது தெரிந்து கொள்ளப்பட்ட ஆவிக்குரிய சபை எப்பொழுது நிறைவுபெறும் என்று காத்துக்கொண்டிருக்கிறார். பிறகு மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அதன் பிறகு ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் பூமிக்குரிய சுதந்தரத்தின் உண்மையான வாரிசுகள் அனைவரும் கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற உலக ஆசீர்வாதத்தின் மகா வேலையில் ஒரு பங்கை அனுபவிப்பார்கள்.

யாக்கோபு பரலோக ஆசீர்வாதத்தை மட்டும் நம்பி, தனது தகப்பன் வீட்டை கைவிட்டு எல்லாவற்றையும் தனது சகோதரனுக்கு சர்ச்சையில்லாமல் விட்டுக் கொடுத்தது போல, ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நாம் பரலோக ராஜ்யத்தில் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராவதற்காக பூமிக்குரிய இலக்குகள் மற்றும் நம்பிக்கைகள் அனைத்தையும் விட்டுவிட வேண்டும். யாக்கோபு அமைதிக்காகவும், செழுமைக்காகவும் இந்த வாக்குத்தத்தத்தின் கீழாக தேவனுடைய ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காகவும் நல்ல வெகுமதிகளை தனது சகோதரனுக்கு கொடுப்பதில் சந்தோஷம் அடைந்தது போல கிறிஸ்தவர்களாக நாம் வாழ்க்கையில் நமது துணைவர்கள், நமது அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரர்களுக்கும் பூமியின் நன்மைகளை அதிகமாக கொடுக்க விருப்பம் உடையவர்களாக இருக்க வேண்டும். இவ்வாறு நமது ஆர்வத்தை நாம் நம்பிக்கை வைத்திருக்கிற ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தில் கர்த்தருக்காக முன்னேற்றுவோம்.

உலகமானது தற்காலத்திற்குரிய காரியங்களை பெற்றிருக்கிறது. அதன் பரிசும் அவர்களுக்கு இருக்கிறது. மனுக்குலமானது அவர்களது இருதயத்தை உலக காரியங்களில் வைத்திருக்கிறது. இதைக் காட்டிலும் உயர்ந்ததை அவர்கள் அறியார்கள். அதற்கு மாறாக நாம் பரலோக காரியங்களை மதித்து உணர்கிறோம். அப்போஸ்தலர் கூறுவது போல பூமிக்குரியவைகள் அதோடு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல. நாம் பரிசுத்த பவுலைப் போல உலக மேன்மைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்றும் குப்பையுமாக மதிக்க வேண்டும்.

இதன் மூலம் பூமியின் சகல வம்சங்களையும் ஆசீர்வதிக்கிற இந்த வாக்குத்தத்தத்தின் மகிமையான வேலைகளில் பங்குபெறவும் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக ஆகி, தேவனுடைய மகா ஆசீர்வாதத்தில் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரத்தை பெறுவோம். (கலாத்தியர் 3:29)

## உங்கள் நல்லெண்ணத்தை மேலானவைகளில் வையுங்கள்

தேவன், விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கான குறிப்பிட்ட பாடங்களை கற்றுக்கொள்ள பழைய ஏற்பட்டு கால பாத்திரர்களுக்கு வைத்திருந்தார். அதை அவர்கள் எவ்வளவு நேர்த்தியாக கற்றுக் கொண்டிருக்கிறார்கள். எந்த அளவுக்கு விசுவாசம், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யக்கோபின் வாழ்க்கையிலும் பரிசுத்த பவுல் எபிரேயர் 11ஆம் அதிகாரத்தில் பட்டியலிட்டவர்களின் வாழ்க்கையிலும் வெளிப்படுத்தப்பட்டது என்பதை நாம் பார்க்கிறோம்.

அந்த உயர்ந்த குண லட்சணங்களை பெற்றிருந்தவர்கள், மேசியாவின் ராஜ்யத்தில் மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும் வேலையில் ஒரு நல்ல இடத்தை பெறுவதில் நாம் ஆச்சரியப்ப – டவில்லை. வாழ்க்கையில் அவர்களது அனுபவம், மேசியாவின் ராஜ்யத்தில் அவர்களுக்கு முன்பாக இருக்கிறவைகளுக்கான ஒரு பள்ளி படிப்பாகவும் பயிற்சியாகவும் தயார் செய்தலாகவும் இருக்கிறது. அவர்கள் தேவனிடம் உண்மையுள்ளவர்களாக இருந்து, இருளில் அவரில் நம்பிக்கை வைத்து அவரது சித்தத்தை செய்து, பூமிக்குரிய நன்மைகளை உண்மையாக பலியிடுகிறவர்களாக இருந்திருப்பார்களானால், அவர்கள் பூரண மானிடர்களாக மேசியாவின் ராஜ்யத்தின் சாதகமான சூழ்நிலையில கனத்துக்குரிய ஊழியமும் வல்லமையும் மாபெரும் மேசியாவினால் அவர்களிடம் ஒப்படைக்கப்படும் பொழுது அவர்கள் உண்மைத் தன்மையிலும் விசுவாசத்திலும், கீழ்ப்படிதலிலும் குறைவுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள் என்று நாம் உறுதிப்படுத்தலாம்!

வீட்டின் பணிவிடைக்கார்களாகிய பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்களுக்கு கீழ்ப்படிதல், விசுவாசம், உண்மைத்தன்மை ஆகியவைகளில் சோதனை தேவைப்பட்டால், கிறிஸ்தவ சபையாராகிய ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட அங்கங்களுக்கு இதே காரியங்களில் சோதனை தேவைப்படும் என்பதை யாரால் பார்க்கக்கூடாது இருக்கக்கூடும்! அவர்களைக் காட்டிலும் நமது சோதனை மிகவும் முழுமையாக இருக்க வேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. 1. அவர்கள் வீட்டின் பணிவிடைக்காரர்களாக மட்டும் இருக்கும் பொழுது, நாம் குமாரர்களின் வீட்டின் அங்கங்களாக இருக்கிறோம். நாம் தேவனுடைய குமாரர்களாக ஆவியினால் ஜெனிப்பிக்கபட்டவர்களாக மாத்திரமல்ல, தேவனுடைய சித்தத்தை அறியும்படிச் செய்து, அவருடைய திட்டம் எப்படி வேலை செய்கிறது என்பதை நமக்கு காண்பித்து தெய்வீக வெளிப்படுத்துதலில் அதிகமான வெளிச்சம் கிடைக்கப் பெற்றவர்களாக இருக்கிறோம். 2. இதோடு கூட நமது சோதனை இன்னும் உயர்ந்த நிலையான கனம் மற்றும் மகிமைக்கு உரியதாக இருக்கிறது. அதாவது ''தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுகிறவர்களுக்குரியதாக'' இருக்கிறது. இன்னும் பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் பெறப்போகிற பூமிக்குரிய தளத்தைக் காட்டிலும் முக்கியமானதான ஆவிக்குரிய தளத்தில் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகப் போகிற நமக்குரியதாகும். இப்படிப்பட்ட மாபெரும் சலுகைகளையும் கிருபைகளையும் வெளிச்சத்தையும் பெற்றிருக்கிற நாம் பரிசுத்த பேதுரு கூறுவது போல. ''நாம் எப்படிப்பட்ட நடக்கையுள்ளவர்களக இருக்க வேண்டும்!''

கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து ஆபிரகாம் தன்னுடைய தகப்பன் வீட்டையும் உறவினர்களையும் விட்டு ஒரு அந்நியனாக அந்நிய தேசத்துக்கு சென்றிருந்தால், இந்த சுவிசேஷ யுகத்தில் கர்த்தரின் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட பிள்ளைகளிடத்தில் அவர் குறைவான விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் எதிர்பார்ப்பாரா? நிச்சயமாக இல்லை! யாக்கோபு தனது தகப்பனின் சொத்துக்களில் தனது உரிமைகள் அனைத்தையும் கை விட்டிருந்தால் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் இன்னும் அதிகமாக செய்ய விருப்பம் உடைவர்களாக இருக்க வேண்டாமா? யாக்கோபு தன்னுடன் அதிகம் கடன்பட்டவர்களுடன் சமாதானத்தை உறுதிப்படுத்த தனது பூமிக்குரிய சொத்துக்களை தாராளமாக கொடுக்க விருப்பம் உள்ளவராக இருந்திருந்தால், தெய்வீக திட்டத்திற்கு தொடர்புடைய பரம அழைப்புக்கும் வெகுமதிக்கும் நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்துவதற்கு நாம் உயர்வாக மதிக்கிற நம்முடைய சுதந்தரத்தையும் சலுகைகளையும் பலப்படுத்துவதற்கு பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிற நாம் இந்த உலக பொருட்களை, சொத்தை, தற்கால உலகை விரும்புகிறவர்களுக்கு இன்னும் அதிக பெருந்தன்மையுடன் கொடுக்க விருப்பம் உடையவர்களாக இருக்க வேண்டாமா?

## கடைசியாக நமது தங்க வசனம்

நமது தங்க (தலைப்பு) வசனம் பாடத்திற்கு மிகவும் சம்பந்தம் இல்லாததாகக் காணப்பட்டது. எனினும் அங்கே சம்பந்தம் இருக்கிறது. அது இதுதான். பெருந்தன்மை மற்றும் தரும சிந்தனையின் ஆவியை கர்த்தரினிமித்தம் வளர்த்து மற்றவர்களிடம் காண்பிப்பவர்கள், அதன் மூலம் தங்களது குணலட்சணத்தை உயர்த்துகிறார்கள். நமது சத்துருக்களோடும் உலகத்தோடும் தொடர்பு கொள்ளுவதில் பெருந்தன்மையை அப்பியாசப்படுத்துவது நமது குடும்பம், நமது வீடு விஷேசமாக நமது தலைப்பு வசனம் குறிப்பிடுகிற கர்த்தரின் குடும்பம் முதலானவைகளில் நமது அனைத்து தொடர்புகளிலும் நம்மை படிப்படியாக இன்னும் அதிக பெருந்தன்மையுள்ளவர்களாக ஆக்குகிறது.

''ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.'' மகா பெரிய இரட்சகருடன் அவரது மேசியாவின் ராஜ்யத்தில் தெய்வீக ஊழியம், மகிமை, கனம் ஆகியவைகளுக்காக தயார்படுத்தபடவும் போதிக்கப்படவும் இந்த சுவிசேஷ யுகத்தின் சபையானது கிறிஸ்துவின் பள்ளியாக குறிப்பிடப்படுகிறது என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்த பள்ளியின் பாடங்கள் பரிசுத்த ஆவியின் கிருபைகளாக இருக்கின்றன; நாம் எந்த அளவுக்கு இந்த கிருபைகளை அடைகிறோமோ, அந்த அளவுக்கு தேவன் நம்மை அழைத்திருக்கிற இராஜ்யத்தின் இடத்திற்காக நாம் தயார்படுத்தப்படுவோம் என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்த ஆவியின் கனிகளை வளர்க்க தேவனுடைய பிள்ளைகள் எந்த அளவுக்கு அசட்டை பண்ணுகிறார்களோ, அதே அளவுக்கு மேசியாவின் ராஜ்யத்தில் பங்குபெற தகுதியற்றவர்களாக இருப்பார்கள்.

பரிசுத்த பேதுரு, ''உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்'' என்று கூறிய புத்திமதியின் சாராம்சமாக இது இருக்கவில்லையா? ''இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க -வொட்டாது. இவ்விதமாக, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்.'' இவைகள் இல்லாதவன் கண் சொருகிப்போன குருடானாயிருக்கிறான். இவன் இந்த தற்கால வாழ்க்கையின் காரியங்களையே பார்த்துக்கொண்டு இப்பொழுது சமீபமாயிருக்கிற புதிய யுகத்தின் ஆரம்பத்திற்கு முன் பட்டபடிப்பு பரீட்சைக்கு தயாராக இருக்கமாட்டான். (2 பேதுரு 1: 5-11)

R5206

## The Different steps in Justification
## நீதிமானாக்கப்படுவதில் வெவ்வேறு படிகள்

கிறிஸ்து உலகிற்கு வருவதற்கு முன்னரே தேவன் மனுக்குலத்தில் சிலரோடு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தொடர்பு கொண்டிருந்தார். ஆதாமிடம் பாவத்திற்கான தண்டனையை சொல்லி, ஸ்திரீயின் வித்து ஒரு நாள் சர்ப்பத்தில் தலையை நசுக்கும் என்று வாக்குத்தத்தம் பண்ணினார். இயேசு பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பு அவர் ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு இன்னும் மற்றவர்களுடனும் தொடர்பு வைத்திருந்தார். எனினும் தேவன், ''தேவனுடைய பிள்ளைகள்'' ( யோவான் 1:12) என்று அழைக்கப்பட சலுகை பெற்றிருந்த சுவிசேஷ யுக சபையுடன் அவர் கொண்டிருந்த விசேஷித்த மற்றும் குறிப்பிட்ட விதத்தில் இந்த மனிதர்களுடன் தொடர்பு கொள்ளவில்லை.

ஆபிரகாம், தேவனை விசுவாசித்தான். அந்த விசுவாசம் அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. (ஆதியாகமம் 15:6) ஆபிரகாம் தேவனை விசுவாசத்திற்கு முன்னரே தேவன் அவரோடு தொடர்பு கொண்டிருந்திருக்க வேண்டும், இல்லையென்றால் அவர் விசுவாசிப்பதற்கு எதுவும் இருந்திருக்காது. முடிவாக விசுவாசமும் நம்பிக்கையும் அவரை நீதிமானாக்கப்பட்ட நிலைமைக்கு கொண்டு வருவற்கு முன்னரே தேவன் அவருடன் தொடர்பு கொண்டிருந்திருக்க வேண்டும்.

ஆபிரகாம் கூடுமானவரை பூரண நிலைமையில் இருக்கும்படியும் தேவனுக்கு பிரியமானதை செய்யும்படியும் நாடினார். ஆபிரகாம் தேவனிடம் கீழ்ப்படிதலுள்ளவனாய் இருப்பேன் என்கிற விருப்பத்தை வெளிப்படுத்தினபடியால் தேவன் கூறியதாவது: ''நீ உன் குழந்தை பிராயத்திலிருந்து இருந்த உன் வீட்டையும் தற்கால உனது பூமிக்குரிய சுகங்களையும் விட்டு உனது தேசத்தை விட்டு வெளியேறி உனது விசுவாசத்தை நிரூபித்ததால் நான் உன்னோடு உடன்படிக்கை பண்ணுவேன்.'' ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார்.

சந்தர்ப்பம் வழங்கப்பட்ட உடனே ஆபிரகாம் கல்தேயர் பட்டணத்தை விட்டு ஆரானுக்கு பிரயாணமானார். பின்னர் தேவன் ஆபிரகாம் கானான் தேசத்துக்குச் சென்றால் நிபந்தனையுடன் கூடிய வாக்குத்தத்தத்தை பண்ணினார். கானானுக்குள் அவர் நுழைந்த பிறகு, தேவன் கூறியதாவது: '' நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்.'' (ஆதியாகமம் 13: 15) ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான். (யாக்கோபு 2:23) ''உனக்குள் பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும்'' என்று கூறி தேவன் ஆபிரகாமுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்தார் என்று பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார். (கலாத்தியர் 3:8; ஆதியாகமம் 12:3)

### தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பதே நீதியின் சாராம்சம்

ஆகையால் கிறிஸ்து வருவதற்கு முன்னர், ஜீவனுக்கான உண்மையான நீதிமானக்கப்படுவதற்கு முன்னர் பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்களுடன் தேவன் ஒரு விதமான தொடர்பை கொண்டிருந்தார் என்று நாம் பார்க்கிறோம். ஆதாமுடைய தண்டனையினால் இழந்துபோன ஜீவனுக்கான சரியான விலைக்கிரயம் கொடுக்கப்படுவதற்கு முன்னதாக யாரும் நீதிமானக்கப்பட இயலாது. ஆகையால் தேவனுடைய வாக்குத்தத்தமானது இந்த காரியங்களை பொருத்த மட்டில் ஒரு நம்பிக்கையாக மட்டுமே இருந்தது. அவர்களது உதவிக்காக தேவன் ஏதோ ஒரு வழியில் ஏதோ ஒன்றை செய்ய இருந்தார் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள். ஆனால் ஒரு காலத்தில் மரண தண்டனை கொடுக்கப்பட்டவர்களுக்கு தேவன் எப்படி நித்திய ஜீவனை கொடுக்கப் போகிறார் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள். எனினும் அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தில் விசுவாசம் வைத்திருந்தார்கள். இதனால் தேவன் அவர்களை நீதிமானாக எண்ணினார். ஏனென்றால் தேவன் பேரில் வைக்கும் விசுவாசமே எல்லா நீதியின் சாரம்சமாக இருக்கிறது. இந்த விசுவாசத்தினால் தேவனுடன் ஐக்கியம் வைத்துக்கொள்ள அவர்கள் நீதிமான்களாக்கப்பட்டார்கள்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் அனைத்து தீர்க்கதரிசிகளும் தேவனிடம் தங்களது விசுவாசத்தை வெளிப்படுத்தின போது அவர்கள் தங்களது உண்மையான இருதயத்தை நிரூபித்தார்கள். இதன் மூலம் அவர்கள் மரித்த பிறகும் கூட, தேவன் அவர்களைக் குறித்து கூறியதாவது: ''நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன்.'' ஒரு நாள் நாங்கள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருப்போம் எனறு அவர்கள் நம்பினார்கள். உயிர்த்தெழுதல் இல்லையென்றால் தேவன் அவர்களைப் பற்றி இப்படியாக பேசியிருக்கமாட்டார்: ''அவர் மரித்தோரின் தேவனாயிராமல் ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார்.'' (லூக்கா 20: 37,38) இது மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லையென்று போதித்த சதுசேயர்களின் போதனைகளுக்கு மாற்றாக இருந்தது. ஆனால் முற்பிதாக்கள் அந்த காலக்கட்டத்தில் பரலோகத்தில் இருந்தார்கள் என்பதற்காக ஒரு ரூபகரமாக அது இல்லை. ஏனெனில் யாரும் பரலோகத்திற்கு எழுந்தருளி போகவில்லை என்று அப்பொழுது இயேசு மிகத் தெளிவாக நமக்கு சொல்லுகிறார். (யோவான் 3:13)

அப்பொழுது ஆபிரகாம் தேவனோடு ஒரு குறிப்பிட்ட அளவு உறவு வைத்திருந்தார். ஆனால் அவரது விசுவாசத்தை வெளிப்படுத்தி காண்பிக்கிற வரை அல்ல என்று நாம் பார்க்கிறோம். எனினும் அவர்கள் தங்களது உண்மையான இருதயத்தை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்கு முன்பதாகவே தேவன் அவர்களோடு தொடர்பு கொண்டிருந்தார். அந்த தொடர்பானது, எப்படி தேவனுக்கு நண்பனாவது என்பது குறித்த அறிவை கொடுப்பதற்காக ஆகும்.

தேவன் மனுமக்களை நிபந்தனையுடன் ஏற்றுக்கொண்டு தாம் அவர்களுக்கு தேவனாகவும், அவர்கள் தம்முடைய ஜனங்களாகவும் இருப்பார்கள் என்று ஏற்ற காலத்தில் மனுமக்களிடம் கூறுவார். ஆனால் அவர்கள் தங்களால் முடிந்த அளவு தங்களது விசுவாசத்தை தங்களது நடக்கைளின் மூலம் நிரூபிக்க வேண்டும். தேவன் ஒவ்வொருவருக்கும் செய்யக்கூடிய காரியம் இதுதான். முழுமையாக நீதிமானக்கப்படுதலுக்காக ஒருவன் எடுக்க வேண்டிய முயற்சிகளைப் பற்றிய அறிவை அவனுக்கு கொடுத்தல் ஆகும். அவர் கூறுவதாவது: ''என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா.'' (நீதிமொழிகள் 23:26)

இந்த நியமத்தின்படிதான், தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் பேசினார். தம்மிடம் கிறிஸ்து மூலம் வருகிற அனைவரிடமும் தொடர்ந்து பேசினார்.

**பரிஷார்த்தமான நீதிமானாக்கப்படுதல் அர்ப்பணம் அல்ல**

ஆபிரகாமின் காலத்தைக் காட்டிலும் தற்போது காரியங்கள் மிகவும் வேறுபட்டிருக்கின்றன. ஆபிரகாம் தேவனுடைய பிள்ளையாகவில்லை. ஏனெனில் ஜீவனுக்கான வழி திறக்கப்படுதவற்கு முன்னரே அவர் வாழ்ந்தார். நீதிமானாக்கும் விசுவாசமாக தேவனால் கருதப்பட்ட அதனால் ஆபிரகாமுக்கு இரட்சிப்பை கொண்டு வர முடியவில்லை. ஜீவனுக்கான வழியை தேவன் அதுவரை திறக்காமலிருந்தார். இரட்சிப்புக்கான காரியம் எதுவும் நடைபெறாதிருந்தும், ஏற்ற காலத்தில் ஆபிரகாமும் அவரது சந்ததியும் உலகத்தை ஆசீர்வதிக்கும் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பெற்றார்.

ஒரு காலத்தில் தேவனுடைய பிள்ளைகளாயிருந்து, ஆதாமின் கீழ்ப்படியாமையினால் பிள்ளைகள் என்ற உரிமையை இழந்தவர்களை தேவன் மறுபடியும் ஏற்றுக்கொள்ள விருப்பம் உடையவராயிருக்கிறார் என்ற செய்தி இப்பொழுது சென்று கொண்டிருக்கிறது. ஆகையால் தேவனுடைய திட்டத்தை பற்றிய அறிவு, அந்த திட்டத்தை கேட்கிறவர்களுக்கு இரட்சிப்புக்கான ஒரு அழைப்பாக இருக்கிறது. தேவன் சொல்லுகிறதாவது: "நீ என்னுடைய பிள்ளையாக விரும்பினால் இதுதான் வழி. 'என் மகனே உன் இருதயத்தை எனக்குத் தா! நீ முழு அர்ப்பணம் செய்த பிறகு, எனது வசனத்தின் ஆழ்ந்த காரியங்களை உனக்கு வெளிப்படுத்துவேன்."

தேவன் என்ன செய்திருக்கிறார் என்பதற்கும் என்ன செய்ய விரும்புகிறார் என்பதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். தேவன் ஆபிரகாமையும் கடந்த யுக விசுவாசிகளையும் பணிவிடைக்கார வகுப்பினராகக் கருதினார். (எபிரேயர் 3:5) ஆனால் சுவிசேஷயுக விசுவாசிகளை வேறு விதமாக எண்ணுகிறார். பரிசுத்த யோவான் கூறுகிறதாவது: "அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்." (யோவான் 1:12) பெந்தெகொஸ்தே நாளிலிருந்து அவரது பிள்ளைகளாகும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த காலத்திற்கு முன்பதாக யாரும் "தேவனுக்கு சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரரும்" ஆக முடியாது; ஆபிரகாமின் வாக்குத்தத்தின் சுதந்தரருமாக ஆக முடியாது. (ரோமர் 8:17)

பெந்தெகோஸ்தே நாளிலிருந்து கிறிஸ்துவுக்குள் வந்து, முடிவு வரை உண்மையுள்ளவர்களாக இருந்து அவரோடு கூட பாடுபட்டால், அவரோடு கூட மகிமைப்படுத்தப்படுவார்கள் என்ற உறுதிமொழி அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. (ரோமர் 8:17) தேவனுடன் முழு உறவை பெற்றிருப்பவர்கள் மட்டுமே அர்ப்பணம் செய்தவர்கள். அவர்கள் தான் ஜீவனுக்கான முழு நீதிமானாக்கப்படுதலை பெற்றிருப்பார்கள்; உலகில் வேறு யாருமில்லை.

தேவன் கடந்த காலத்தில் தம்மோடு தொடர்பு கொண்டவர்களிடம் தொடர்பு கொண்டு தமது குரல் மூலமாக அவர்களை உற்சாகப்படுத்தி வழிகாட்டியது போல, தற்போது தம்மிடம் தொடர்பு கொண்டவர்களுக்கு தமது சித்தத்தை பற்றிய செய்தியை தமது குமாரன் மூலமாகவும் நமது கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தில் உள்ள விசுவாசத்தின் மூலமாகவும் கொடுக்கிறார். இப்படியாக தற்போது ஆரம்பிக்கிறவர்கள், நீதிமானாக்கப்படும் நிலைக்குள் வர ஆரம்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எடுக்கிற முன்னேற்றமான ஒவ்வொரு முயற்சியும் அவர்களை அர்ப்பணத்திற்கு அருகாமையில் கொண்டு வருகிறது.

**அறிவிலிருந்து பரிஷார்த்தமாக நீதிமானாக்கப்படும் வரை**

நீதிமானாக்கப்படுதலுக்கு எடுக்கும் முதல் படி கொஞ்சம் அறிவை பெறுவதாகும். ஏனெனில் அறியாமையினால் எந்த மனிதனும் நீதிமானாக்கப்பட இயலாது. அறிவானது விசுவாசம் என்கிற அடுத்த படிக்கு வழி நடத்துகிறது. அந்த அறிவை அடிப்படையாகக் கொண்டு விசுவாசத்தின் ஒவ்வொரு முன்னேற்றமும் அறிவும் விசுவாசமும் பெறுவதற்கான மகா சந்தர்ப்பத்தை தருகிறது. இப்படியாக நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க கற்றுக்கொள்ளுகிறோம்.

எனினும் இந்த படிகள் அனைத்தும் முழுமையான மற்றும் பரிபூரணமான நீதிமானாக்கப்படுதலுக்கு வழி நடத்துகிறது. முதலில் நமக்கு ஒரு மகா சிருஷ்டிகர் உண்டு என்றும், நாம் அவரது சிருஷ்டிகள் என்றும், நம்மேல் இவர் இரக்கம் உடையவராக இருக்கிறார் என்றும் நம்பி, நாம் தேவனில் ஒரு விசுவாசத்துடன் வருகிறோம். அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மற்றும் அவரது கிருபையான கிரியை மூலமாக நம்மை அவருடன் திரும்ப ஐக்கியம் கொள்ள ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கிறார் என்பதை காணும்படி அடுத்தபடி நம்மை வழி நடத்துகிறது. "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்" என்று நாம் பார்க்கிறோம். (1 கொரிந்தியர் 15:3) மாபெரும் அறிவாகிய இந்த படி கீழ்ப்படிதல் என்கிற அடுத்த படிக்கு நம்மை வழிநடத்துகிறது. இப்படியாக நாம் தேவனிடத்தில் சேருகிறோம். பரிசுத்த யாக்கோபு கூறுகிறதாவது: "தேவனிடத்தில் சேருங்கள். அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்." (யாக்கோபு 4:8) ஒவ்வொரு படியும் நம்மை ஆசீர்வாதத்திற்கு அருகாமையில் சேரப்பண்ணுகிறதை நாம் காணும்படி செய்கிறது.

பாவத்தை மன்னிப்பதற்கான வழியை கர்த்தராகிய இயேசு ஆயத்தம் பண்ணியிருக்கிறார் என்பதை அறிந்த பிறகு, நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு குறிப்பிட்ட நிபந்தனைகள் உண்டு என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். இது அறிவின் அடுத்த படியாக இருக்கிறது. பிறகு கர்த்தர் தமது சொந்த வசனத்தினாலும், அப்போஸ்தலர்களின் வசனங்களினாலும் சொல்லப்பட்டதாகிய இந்த பாவ மன்னிப்பானது, அவர் நிறைவேற்றின கிரியையை முழுமையாக ஏற்றுக்கொண்டு அவரில் விசுவாசம் வைப்பதை பொருத்தே இருக்கும் என்ற நிலைக்கு கொண்டு வரப்படுகிறோம். நம்மையும் நமக்குரிய அனைத்தையும் பிதாவானவரிடம் அர்ப்பணம் செய்து, நமது சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவை பின்பற்றுவதே நாம் அந்த வேலையில் பங்குதரராக ஆவதற்கு ஒரே வழி என்ற நிலைக்கு நாம் கொண்டு வரப்படுகிறோம். இந்த படியை நாம் எடுக்காவிட்டால் நாம் முழுமையான நீதிமானாக்கப்படுதலை அடைய முடியாது என்பதை நாம் அறிந்துகொள்கிறோம்.

**பரிஷார்த்தமான நீதிமானாக்கப்படுதல் வரையறுக்கப்படுகிறது**

ஒருவர், பிதாவானவரிடம் அவரது வசனம் மற்றும் அவரது கிருபைகளினால் இழுக்கப்பட்டு, தான் இரட்சிப்படைவதற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தமே ஒரே உபாயம் என்று ஏற்றுக்கொண்டிருக்கும் பொழுது, அவர் தன்னை தேவனிடம் ஒப்புக் கொடுக்க வேண்டுமா அல்லது ஆயிரவருடயுக இளைப்பாறுதலின் ஆசீர்வாதங்களுக்காக காத்திருக்க வேண்டுமா என்று முடிவு பண்ணுகிற இடத்திற்கு வருகிறார். அவர் என்ன செய்வார் என்பது நிச்சயமில்லை. அவர் ஒரு நோக்கத்திற்காக பரிஷார்த்தமாக (தற்காலிகமாக) நீதிமானாக்கப்பட்டிருக்கிறார். அவர் எந்த நிலையை எடுப்பார் என்று கருதி இந்த நிலை கொடுக்கப்படுகிறது.

இன்னும் அவர் மானிட நிலையில் சுபாவ மனிதனாக இருக்கிறார்.

பரிஷார்த்தமான நீதிமானாக்கப்படுதல், தேவனுடன் நிற்குதலை கொடுக்கும் நோக்கத்துடன் தரப்படுகிறது. அதிலிருந்து தனது இரட்சிப்பின் ஒரே நம்பிக்கையாக நமது கர்த்தரின் மீட்கும் பொருள் –பலியில் விசுவாசம் கொண்ட ஒருவரை, முழு அர்ப்பணிப்புக்கு வழி நடத்தும், அந்த பலியின் ஆவியை பெற்றிருக்கிறாரா என்பதை நிச்சயம் செய்து கொள்ளலாம். எந்த மார்க்கத்தை எடுக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் உரிமையை விசுவாசி பெற்றிருக்கிறார். அவர் தன்னை அர்ப்பணத்திற்கு ஒப்புக்கொடுக்கலாம் அல்லது அப்படி செய்யாதிருக்க தீர்மானிக்கலாம். ஆனால் அவர் ஆயிர வருட யுக இளைப்பாறுதலுக்காக காத்திருக்க தீர்மானம் செய்தால், அதன் மூலமாக தேவன் வழங்குவதை அவர் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்பதை நிரூபிக்கிறார்.

இந்த சுவிசேஷ யுகத்தில் சுவிஷேத்தை பிரசங்கிப்பதின் நோக்கமே, அதை கேட்பவர்கள் ஆவிக்குரிய சுபாவத்தை அடைய ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவே ஆகும். அழைப்பைக் கேட்டு அதன் பலனை பெற்றுக்கொள்ள புறக்கணிக்கிறவர்கள் தேவனுடைய கிருபையை விருதாவாக பெற்றிருக்கிறவர்களாவர்கள். அதை ஏற்றுக்கொள்ளுவதினால் அடையக்கூடிய பலனை இழக்கிறவர்களாகிறார்கள். செய்கிற சிறு வேலைக்குக் கூட பலன் வாக்குத்தத்தம் பண்ணபட்டிருக்கிறது. அந்த வேலையை செய்யத் தவறுகிறவர்கள், பரிசு, கனம், பணம் அல்லது அந்த வேலைக்காக என்ன வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அதை இழக்கிறார்கள்.

தங்களது மனித சுபாவத்தை பலியிட தீர்மானம் செய்யாதவர்களுக்கு தண்டனை கொடுப்பது தேவனுடைய நோக்கமல்ல. ஆனால் பலியிடுகிறவர்களுக்காக வைக்கப்பட்டுள்ள பரிசை அவர்களால் பெற இயலாது. கிறிஸ்துவுடன் மரித்து அவரோடு ஜீவனோடிருக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறவர்கள் மட்டுமே மகிமையான காரியங்களில் பங்குள்ளவர்களாகிறார்கள். இந்த படியை எடுக்கிறவர்கள் மட்டுமே தற்கால சபையை அமைக்கிறார்கள்.

எனினும் மற்றவர்கள், எதிர்காலத்தில் ஆயிரம் வருட யுகத்தில் சந்தர்ப்பத்தை பெறுவார்கள் என்று நாம் நம்புகிறோம். அந்த காலத்தின் சாதகமான நிலைமைகளில் இந்த யுகத்தில் அவர்கள் செய்திருக்கிறதைக் காட்டிலும் நன்றாக செய்வார்கள் என்று நாம் நம்புகிறோம். எனினும் தேவனுடைய கிருபையை பற்றிய ஒரு அறிவுக்கு வந்திருந்து அதை பற்றிய ஒரு குறிப்பிட்ட அளவான வெளிச்சத்தை பெற்றிருந்து அதை நிராகரிக்கிறவர்கள், அதை கேட்டிராதவர்களை காட்டிலும் மோசமான நிலையில் இருப்பார்கள் என்பது எங்களது எண்ணமாக இருக்கிறது.

எனினும் எதிர்கால வாழ்வில் நல்ல வேலையில், மறு சீரமைப்பில் விசுவாசம் உள்ளவர்களை நாங்கள் அதைரியப்படுத்த விரும்பவில்லை. பூமிக்குரிய வாழ்க்கையில் மறு சீரமைப்பின் ஆசீர்வாதங்களில் நம்பிக்கை உள்ளவர்களை நாங்கள் அதைரியப் –படுத்தமாட்டோம். விசுவாசமோ அல்லது பரம அழைப்பைப் பற்றிய வெளிச்சமோ இல்லாமல் உயர்ந்த வாழ்க்கையை வாழக்கூடிய அநேக ஜனங்கள் இருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் என்றென்றைக்கும் துன்பப்படக் கூடிய நிலையில் இல்லை. ஆனால் ராஜ்ஜிய ஆசீர்வாதங்களை அடையும் சந்தர்ப்பங்களை இழந்திருப்பார்கள்.

### உயிரூட்டப்பட்ட நீதிமானாக்கப்படுதல்

ஒருவர் நன்கு யோசித்த பிறகே அர்ப்பணம் என்கிற படியை எடுக்க வேண்டும் என்று கர்த்தர் கூறுகிறர். (லூக்கா 14:27–33) ஒருவர் இந்த படியை எடுக்க முடிவு செய்த பிறகு அவர் தன்னை கர்த்தரிடம் ஒப்புக்கொடுக்கிறார். அவரது அர்ப்பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், கர்த்தர் தமது புண்ணியத்தை தேவையான அளவுக்கு அந்த பலியை முழுமைப்படுத்துவதற்கு சாட்டுகிறர். ஏனெனில் அபூரணமான எதுவும் யேகோவா தேவனிடம் ஒப்புக் கொடுக்கப்பட முடியாது. கிறிஸ்துவின் புண்ணியத்தின் சாட்டுதலால் பூரணமானவராக அவர் ஏற்றுக் –கொள்ளப் பட்டவுடனேயே அவர் ஜீவனுள்ளவராக கருதப்படுகிறார். சட்டப்படி அவர் உண்மையான நீதிமானாக்கப்படுதலை அவர் பெற்றுக்கொண்டிருக்கிறார். அவரது நீதிமானாக்கப்படுதல் உயிரூட்டப்பட்டதாக சொல்லப்படுகிறது. வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் நமது கர்த்தராகிய இயேசு அவரது பரிகாரியாக ஆனவுடன், தேவன் அந்த பாவியுடன் இணக்கமாகி அவரை உண்மையிலேயே பூரணமுள்ளவராக கருதுகிறர். முழுமையாக நீதிமானாக்கப்படுதல் என்பது யேகோவா தேவனின் பார்வையில் முழுமையாக சரிபண்ணுதல் ஆகும்.

இந்த முக்கியமான கருத்தை நாம் தெளிவாக புரிந்து கொண்டோம் என்பதை உறுதிப்படுத்திக்கொள்வோமாக. முழு அர்ப்பணம் செய்து, விசுவாசத்தினால் கிறிஸ்துவின் இரட்சிப்பின் வேலையில் தனது பங்கை பெறுகிற ஒருவர் கிறிஸ்துவின் புண்ணியத்தினால் சாட்டப்படும் போது, நீதிமானாக்கப்படுதல் உயிரூட்டப்பட்டதாக சொல்லப்படுகிறது. உயிரூட்டப்பட்ட நீதிமானாக்கப்படுதலை பெற்ற ஒருவர் மறுசீரமைப்பில் பங்குபெற இயலாது. உயிரூட்டப்பட்டது ஜீவனுள்ளதாக ஆக்கப்பட்டதிலிருந்து, உயிரூட்டப்பட்ட நீதிமானாக்கப்படுதல் ஜீவனுக்குள் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஏனெனில் ஒருவர் எதிர்காலத்தில் ஜீவனோடிருத்தல் கர்த்தரின் புண்ணியம் சாட்டப்பட்ட பிறகு அந்த நீதிமானாக்குதலை அவர் தக்க வைத்து கொள்வதிலேயே இருக்கிறது. மாறாக ஆபிரகாமின் நீதிமானாக்கப்படுதல் ஜீவனுக்கானது அல்ல. ஆனால், தேவனோடு ஐக்கியம் கொள்ள மட்டுமே. ஆபிரகாமின் நாளில் இயேசு மரிக்காததினால் அவரது புண்ணியம் யாருக்கும் சாட்டப்பட இயலவில்லை.

பல்வேறு படிகள் மூலம் தேவனே நம்மை வழிநடத்துவதால் நாம் நிறைவான முழுமையான நீதிமானாக்கப்படுதலை அடைகிறோம். அந்த நீதிமானாக்கப்படுதல் இயேசுவினால் உயிரூட்டப்படுகிறது. அவர் தமது புண்ணியத்தினால் சாட்டுதல் பண்ணி நமது குறைவை நிறைவாக்குகிறார். அந்த கனத்திலே பரிகாரி மூலமாக முன்னரே அவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அந்த பலியை தேவன் ஏற்றுக்கொள்கிறார். இந்த ஏற்றுக்கொள்ளுதல் பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலினால் குறிப்பிடப்படுகிறது.

இப்படியாக கிறிஸ்துவின் புண்ணியத்தின் சாட்டுதலினால் மூடப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர் அது முதல் ஒரு புது சிருஷ்டியாக இருக்கிறார். (2கொரிந்தியர் 5:17) அவர் தமது அர்ப்பணத்தில் தொடர்ந்து உண்மையுள்ளவராக இருந்தால், முடிவாக அவர் மணவாட்டி வகுப்பின் அங்கமாக பிதாவானவரிடம் சமர்ப்பிக்கப்படுவார். தமது அர்ப்பணத்தில் உண்மையுள்ளவர்களாக இருக்க தவறியவர்கள் மகா ஆபத்தில் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். அது முடிவாக தங்களது வஸ்திரத்தை கறைபடாமல் காத்துக்கொண்டிருப்பதினால் கிடைக்கக் கூடிய இடத்தை காட்டிலும் குறைவான இடத்திற்கு அவர்களை தயார்படுத்தும்.

இந்த சுவிசேஷ யுகத்தில் தங்களது சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தவர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவி

கொடுக்கப்படுகிறது. இந்த வல்லமை, அவர்களை தேவனுடன் இசைவுக்கு கொண்டு வரவும், கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக தயார்படுத்தவும் ஒரு புது சிருஷ்டியாக அபிவிருத்தி பண்ணவும் அவர்களது வாழ்க்கையில் கிரியை செய்கிறது.

**பரிசுத்தமாகுதல் ஒரு படிப்படியான செயல்பாடு**

சபையின் ஆரம்ப காலக்கட்டத்தில் சபையை ஆரம்பிப்பதற்கு "பரிசுத்த ஆவியின் வரங்கள்" அவசியமாக இருந்தன. எனினும் இந்த ஆவியின் வரங்கள் சபை ஸ்தாபிக்கப்பட்டு, புதிய ஏற்பாடு நிறைவடைந்த உடனே நின்று போனது. இனி நமக்கு குணமாக்கும் வரம், அந்திய பாஷைகள் வரம் போன்றவை இருக்காது. ஆனால் இதைக்காட்டிலும் இன்னும் மதிப்புமிக்க வரங்களை நாம் பெற்றிருக்கிறோம். அந்த வரங்கள் குழந்தை பருவத்தில் இருந்த சபைக்காக இருந்தன. அதற்கு பதிலாக நாம் தற்போது பரிசுத்த ஆவியின் கனிகளை பெற்றிருக்கிறோம். உழைப்பின் பலனால் இவைகள் படிப்படியாக அபிவிருத்தி அடைந்து முதிர்ச்சி பெறுகின்றன.

சில குணலட்சணங்கள், நன்கு கனிந்து மணம் கொடுக்க மற்றவைகளைக் காட்டிலும் அதிக காலம் ஆகிறது. நல்ல, நேர்மையான இருதயத்தில் பரிசுத்த ஆவியை பெற்று, மாபெரும் தோட்டக்காரர் நம்மை கிளைக்கழிக்க அனுமதித்தால், ஏற்ற காலத்தில் நாம் பெரிய ருசியுள்ள கனிகளைப் பெற்றிருப்போம். ஆவியின் கனிகள் வெளியரங்கமாக இருக்கிறது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். நமது வாழ்க்கையில் நாம் அவைகளைக் காண முடியும். அவையாவன: சாந்தம், இச்சையடக்கம், விசுவாசம், நற்குணம், தயவு, நீடிய பொறுமை, சகோதர அன்பு மற்றும் அன்பு.

நாம் புது சிருஷ்டியான ஆரம்பத்தில் பரிசுத்த ஆவியின் கனிகள் நம்மில் முளைவிடுகின்றன. ஆனால் இவைகள் வளர்ந்து முதிர்ச்சி அடைய வேண்டும். கனிகளை உடையவர்களாக நாம் இருக்க வேண்டும். கர்த்தர் சொல்லுகிறதாவது: "என்னில் கனி கொடாதிருக்க கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதை சுத்தம் பண்ணுகிறார்."யோவான் 15:2) கிளைக் கழித்தலிலும், கீழ்ப்படிதலையும் விசுவாசத்தையும் சோதிப்பதிலும் வலி இருக்கிறது. ஆனால் கீழ்ப்படிதலின் ஒவ்வொரு வெளிப்பாடும் மணவாட்டி வகுப்பின் அங்கமாவதற்கு நம்மை தயார் பண்ண உதவுகிறது.

உண்மையான நீதிமானாக்கப்படுதல், உண்மையாக பரிசுத்தமாக்கப்படுதல் மற்றும் கிருபையில் வளர்தல் ஆகியவைகளின் வேலை படிப்படியானதாக இருக்கிறது. முதலாம் உயிர்த்தெழுதலில்தான் நிறைவை அடைவோம். ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்காது." (1 கொரிந்தியர் 15:50) முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுகிறவர்கள் ஆசீர்வதிக்கபட்டவர்களாக, பரிசுத்தவான்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஆவியின் கனிகளையும் கிருபைகளையும் அபிவிருத்தி பண்ணியிருக்கிறார்கள். பரிசுத்த பேதுரு நமக்கு கூறுகிறதாவது: "உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோட சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது." (2 பேதுரு 1: 5–8)

**R5209**

## Qualities and Attributes of Jehovah
## யேகோவாவின் குணங்களும் பண்புகளும்

"ஆதியிலே மனுஷரைச் சிருஷ்டித்த தேவன்" என்று வேதவாக்கியங்கள் ஒரு ஆதியைக் குறித்து அறிவிக்கிறது. அவரது குணங்களும் பண்புகளும் அப்பொழுது இருந்தது போலவே இப்பொழுதும் இருக்கின்றன. ஏனெனில் வேதவாக்கியங்களானது அவரது மாறா தன்மையையும் அறிவிக்கிறது. "நேற்றும், இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்." (எபிரேயர் 13 : 8; சங்கீதம் 90 : 1,2)

யேகோவா தேவனின் சந்தோஷத்திற்கு தோழமை தேவையில்லை. இதுதான் தெய்வீக பரிபூரணத்தின் முழுமையாகும். "நித்திய வாசியாக" இருக்கிறவர் சுயமையப்படுத்தியவராக இருக்கிறார். தேவதூதர்கள் மற்றும் மனிதரின் சிருஷ்டிப்பு உண்மையிலேயே அவருக்கு சந்தோஷமாக இருந்தது. ஏனெனில் மனநிறைவுக்கு சந்தர்ப்பம் அளிக்கவும், சந்தோஷம் கொடுக்கவும் நன்மை செய்யவும் அவர் கருணையுடன் விருப்பம் கொண்டார். மேலும் அவரது சிருஷ்டிகளின் உயர்ந்த நன்மைக்கு தெய்வீக குணலட்சணங்களாகிய நீதி, அன்பு, வல்லமை மற்றும் ஞானம் ஆகியவைகளின் பகுதிகள் அனைத்தையும் வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டியிருந்தது.

**சாத்தானில் நம்பிக்கை வாத பொருத்தமுடையது**

பிதாவானவரின் வல்லமையைக் குறித்து வேதாகமம் அறிவிப்பதாவது: "கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் பார்க்கிறது." அறிக்கையானது நல்லவைகளும் பொல்லாதவைகளும் இருக்கின்றன என்று சுட்டி காட்டுகிறது. இவைகள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட –வைகளும் ஏற்றுக் கொள்ளப்படாதவைகளுமாக இருக்கின்றன. இந்த மேற்கோள்கள் தேவனுடைய சர்வ வல்லமையை வேத வாக்கியங்களில் குறிப்பிடுவதாக இருக்கிறது.

காரியங்களின் சகல நிலைமைகளையும் கர்த்தர் அறிந்திருக்கிறார் என்ற உண்மையானது, அவர் அனுமதிக்கிற நிலைமைகள் மற்ற காரியங்களுக்கு இசைவில்லாமல் இல்லை. அவர் அங்கீகரிக்கா –தவைகளை முடிவாக அழித்துப் போடுவார் என்று அறிவிக்கிறார். "துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்." (சங்கீதம் 145:20)

வேதாகமம், தேவனுடைய வார்த்தை என்று தெய்வீக வெளிப்பாட்டை நாம் ஏற்றுக்கொண்டால், பிறகு சாத்தான் என்ற ஒரு ஜீவி இருக்கிறான் என்பதையும் அவன் "இப்பிரபஞ்சத்தின் தேவனாயிருக்கிறான்" (2 கொரிந்தியர்4:4) என்பதையும் "அவன் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்கிறான்" (எபேசியர் 2:2) என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உலகத்தில் தீய கொள்கைகள் கிரியை செய்கிறது என்பதையும், ஆனால் அவைகளின் பின்னே தீய ஆவியின் ஜீவிகள் இருக்கின்றன என்பதையும், இவைகளை சாத்தான் ஊக்குவித்துக்கொண்டு அவைகள் மூலமாக கிரியை செய்து கொண்டு இருக்கிறான் என்பதையும் இந்த வார்த்தைகள் சுட்டி காட்டுகின்றன.

சாத்தானைக் குறித்து சில அறிக்கைகள் சொல்லப் –பட்டிருக்கின்றன. ஆனால் அவைகளை தீய கொள்கைகளுக்கோ, தீய கிரியைகளுக்கோ சரியாக உபயோகிக்க முடியாது. உதாரணத்திற்கு சாத்தான், "ஆதி முதற்கொண்டு ஒரு கொலை பாதகன்," "பொய்யன்"

என்று இயேசு அறிவிக்கிறார். (யோவான் 8:44) அப்படி அதை பிரயோகித்தால் அது தவறான பிரயோகமாகும். ஒரு அறிவுள்ள ஜீவிதான் ஒரு கொலை பாதகனாகவோ அல்லது பொய்யனாகவோ இருக்க முடியும். ஆகவே வேத வாக்கியங்களின் முழு ஒழுங்கும், சாத்தான் என்கிற ஒரு ஜீவி இருக்கிறான் என்றும், அவன் தேவனுக்கு எதிராக இருக்கிறான் என்றும் உறுதிப்படுத்துகின்றன.

சாத்தான், தேவனுக்கு சத்துருவாக தொடர்ந்து நிச்சயமாக ஜீவிக்கிறவனாக இருக்கிறான் என்று நாம் நினைத்தால், அந்த காரியம் நமக்கு வினோதமாக காணப்படும். ஏனெனில் அது தெய்வீக வல்லமையைப் பற்றிய நமது எண்ணத்திற்கு ஒத்துப்போகாததாக இருக்கும். அவனது ஆளுகைப் பற்றியும், முடிவாக அவனது அழிவைப் பற்றியும் வேத வாக்கியங்களின் அறிக்கையை நாம் பெற்றிருக்கிறோம். (எபிரேயர் 2:14) இந்த தகவல்கள் மூலம் இந்த பொருள் பற்றி அறிவு பூர்வமான நியாயமான ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறோம். வேத வாக்கியங்களின் விளக்கத்தை நாம் இன்னும் கவனித்தால், ஆரம்பத்தில் சாத்தான் தீய ஜீவியாக இல்லை என்பதையும், அவன் தனது தனிப்பட்ட சுதந்தரத்தை அப்பியாசப்படுத்தி, தீயவனாகவும் தேவனுக்கு எதிரியாகவும் தானே ஆனான் என்பதையும் அறியலாம். பொருள் தெளிவாகவும் நியாயமானதாகவும் காணப்படுகிறது. உண்மையிலேயே இது மட்டுமே அவன் இருக்கிறான் என்பதற்கு சரியான அறிவுப் பூர்வமான தீர்வாக இருக்கிறது.

சாத்தான் இல்லை என்றோ, இந்த காரியத்தில் மனுக்குலத்தை வஞ்சிக்க தமது வசனத்தை தேவன் அனுமதித்தார் என்றோ அல்லது பிசாசு தேவனுடைய ஒரு வெளிப்பாடே என்றோ எண்ணினால் அது நினைத்து பார்க்க முடியாத ஒரு தவறான காரியமாக இருக்கும். தேவனுக்கு எதிரியாக ஒரு பிசாசு இருக்கிறான் என்றும் அதே சமயத்தில் தேவன் எல்லாவற்றிலும் எல்லாமாக இருக்கிறார் என்றும், அவர் சர்வ வல்லவர், எங்கும் இருக்கிறவர் என்று சொல்லுவது அறிவுப்பூர்வமானதாக இருக்காதா. ஆனால் இந்த முந்தின அறிக்கை வேத பிரகாரமானதாக இருக்கிறது என்பதை நாம் காணவில்லை. ஆயிரம் வருட யுக முடிவில் சாத்தான் மற்றும் பாவத்தை கிறிஸ்து ஜெயங்கொள்ளும்போது சாத்தான் அழிக்கப்படும் போது, பிரபஞ்சத்தின் சாம்ராஜ்யம் அனைத்தும் பரிபூரண இசைவில் இருக்கும் போது தேவன் எல்லாவற்றிலும் எல்லாமாக இருப்பார். (1 கொரிந்தியர் 15: 28) அவரது சித்தத்திற்கு எதிராக நித்தியத்திற்கும் எந்த வித எதிர்ப்பும் இருக்காது. எனினும் இப்பொழுது அநேக இடங்களிலும் அநேக நேரங்களிலும் எதிர்ப்பு இருக்கிறது. ஆனால் முடிவாக தேவன் முழு கட்டுப்பாட்டையும் பெற்றிருப்பார்.

### யேகோவாவின் சர்வ வல்லமை

தேவன் சகல சக்தியாக இருக்கிறார் என்று சொல்வது ஏமாற்றுப் பேச்சாக இருக்கிறது. இது கேள்வி கேட்கிறவரையும் , பதில் கூற முயற்சிக்கிறவரையும் பெரும்பாலும் தவறாக வழி நடத்துகிறது. இந்தக் கூற்று சரியானதல்ல. அவர் சகல வல்லமையாக இருந்தால், பிறகு அவர் அன்பாக அல்லது நீதியாக அல்லது ஞானமாக இல்லை. இப்படியாக ஒரு குணமாகிய அவர் வல்லமை அல்லது சக்தியில் எல்லைக்குட்பட்டவராக இருந்திருப்பார். இது அறிவுப்பூரணமான சிந்தையினால் ஊக்குவிக்கப்படக் கூடிய கருத்தாக இருக்க முடியாது. இருந்த போதிலும் அது அடிக்கடி தற்செயலாக பயன்படுத்துகிற கூற்றாக இருக்கிறது. ஆனால் இது பகுத்தறிவுக்குரிய போதனைக்கு மிகவும் தீங்கு விளைவிக்க கூடியதாக இருக்கிறது.

தேவன் சகல வல்லமையாக இருக்கிறார் என்று வேதாகமம் எங்கேயும் சொல்வதில்லை. வல்லமையாக இருப்பதற்கும் வல்லமையை அப்பியாசப்படுத்துவதற்கும் இடையே குறிப்பிட்ட வித்தியாசம் இருக்கிறது. தேவன் சகல வல்லமையுடையவராக இருக்கிறார். அவர் தமது சித்தத்தின்படி எந்த திசையிலும் எந்த அளவுக்கும் வல்லமையை பிரயோகிக்க திறமையுடையவராக இருக்கிறார். தேவன் நினைத்திருந்தால் தெய்வீக சித்தத்திற்கு விரோதமாக சிந்திக்கவோ, செயல்படவோ முடியாதபடி சாத்தானை சிருஷ்டித்திருக்க முடியும். அல்லது சத்துருவை அழிக்க அவர் தமது வல்லமையை பிரயோகித்திருக்க முடியும். இப்படியாக சாத்தானை நீண்ட காலத்திற்கு முன்பே தேவன் அழித்திருக்க முடியும். ஆனால் அவர் சாத்தானை ஆறாயிரம் வருஷம் இருக்க அனுமதித்திருக்கிறார். அதாவது சாத்தானை தீமைகளை செய்வதிலிருந்து கட்டுப்படுத்தவில்லை. எனினும் தேவன் அவனை இறுதியில் அழிப்பார் என்று வேத வாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன.

தெய்வீக வல்மையை அப்பியாசப்படுத்தும் வாய்ப்பு பிரபஞ்சம் முழுவதும் இருக்கிறது. ஆனால் பிரபஞ்சம் என்ற வார்த்தைக்கு பொருள் அறிவது நமது எல்லைக்குட்பட்ட சிந்தைக்கு கடினமாக இருக்கிறது. வான சாஸ்திர நிபுணர்கள் வானியல் போட்டோ (Photo Astronomy) உதவியினால் ஏறக்குறைய 125,000,000 சூரியன் இருக்கின்றன என்றும், சூரிய முறைமைகளின் மையம் நம்முடையதைப் போன்றே இருப்பதாவும் நூறு கோடிக்கு மேலான கிரகங்கள் ஏறக்குறைய நமது பூமியைப் போன்றே இருப்பதாவும் நமக்கு கூறுகிறார்கள். மாபெரும் சிருஷ்டிகர், ஏற்ற காலத்தில் யாருக்கு கொடுக்க போகிறாரோ, அவர்களுக்காக இவைகளை தயார் –படுத்துகிற வேலை முன்னேறிக் கொண்டிருக்கிறது என்று நாம் அனுமானிக்கலம், எனினும் வேதவாக்கியங்களின் கருத்துப்படி, மனுக்குலத்தின் மாபெரும் சிருஷ்டிப்பின் வேலை பூமியிலிருந்து தான் ஆரம்பித்தது. நூறு கோடி உலகங்களில் ஜனங்கள் நிரப்பப்பட போகிறார்கள். தற்போது மனுக்குலத்திற்கு போதிக்கப்பட்டிருக்கும் பாடங்களாகிய நீதி மற்றும் பாவம், ஜீவன் மற்றும் நித்திய மரணம் போன்றவை மறுபடியும் போதிக்கப்படத் தேவையில்லை. நமது வெறும் யோசனை மூலமாக எப்படி எல்லையற்ற கருத்துக்களை கொண்டிருக்கிறோம்!

அளவற்ற இடத்தைப் பற்றியும், எவ்விடத்திலும் ஆளுகை செய்கிற சட்டம் ஒழுங்கு குறித்தும் நாம் திடுக்கிட்டு நிற்கிறோம்! நாம் தீர்க்கதரிசி தாவீதின் வசனத்திற்கு இதய பூர்வமான சம்மதத்தை தெரிவிக்கிறோம். ''பகலுக்கு பகல் வார்த்தைகளைப் பொழிகிறது. இரவுக்கு இரவு அறிவை தெரிவிக்கிறது. அவைகளுக்கு பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை.'' (சங்கீதம் 19:2,3) இந்த ஆச்சரியமான காட்சிப்படுத்தப்பட்ட தெய்வீக சக்தியை கவனித்து, இந்த உலகங்கள் தானாகவே சிருஷ்டித்துக் கொண்டது என்று நம்புகிற ஒருவர், அவருக்கு மூளையிருந்தால், அது பரிதாபகரமாக சீர்குலைந்து, சமநிலையற்று இருக்கிறது என்று நம்மில் பெரும்பாலனவர்களுக்கு காண்பிக்கிறது. ஒருவர் முதிர்ந்த சிந்தனைக்கு பிறகு, தேவன் இல்லை என்றும் தற்செயலாக எல்லாம் உண்டாயின அல்லது குருட்டு சக்தியினால் உண்டாயின என்றும் தீர்மானித்தால், அவரைக் குறித்து வேத வாக்கியங்கள் விளக்குகிறதாவது: ''தேவன் இல்லையென்று மதிகெட்டவன் தன் இருதயத்திலே சொல்லிக்கொள்கிறான்.'' (சங்கீதம் 14:1)

விஞ்ஞானக் கருவிகள், பிரபஞ்சத்தின் மகத்துவத்தை நமக்கு விளக்குவதால், சிருஷ்டிகரின் மகத்துவத்தையும் அவரது மாட்சிமை தங்கிய சக்தியையும் பற்றி தீர்க்கதரிசி உண்மையிலேயே மிதமான

மொழியில் விளக்குவதை நாம் உணருகிறோம். யேகோவா மலைகளைத் தராசினால் நிறுத்தி, தண்ணீர்களை தமது கைப்பிடியினால் அளக்கிறார். (ஏசாயா 40:12) அவரது பார்வைக்கு ஆயிரம் வருடம் நேற்று கழிந்த நாள் போலவும் இராச்சாமம் போலவும் இருக்கிறது. (சங்கீதம் 90:4) தேவனுக்கு முன்னால் நாம் அனைவரும் எப்படி ஒரு அற்பமான சிறிய ஜீவியாக உணருகிறோம்! சில பெரிய மனிதர்கள் மனுக்குலம் தெய்வீக பார்வையில் மிகவும் அற்பமாகவும், மிகவும் குறைவான கவனிப்புக்கு தகுதியானதாகவும், தெய்வீக பராமரிப்பு மற்றும் கிருபைக்கு மிகவும் சிறியவர்களாக இருப்பதாகவும் கூற விரும்புவதில் ஆச்சரியம் ஏதுமில்லை!

**யேகோவாவின் சர்வ விஞ்ஞானம்**

தேவன் சர்வ அறிவாக இருக்கிறார் என்று சொல்வது கூட சரியான கூற்று அல்ல. சர்வ அறிவே தேவனாக இருந்தால் எப்படி அவர் சர்வ வல்லமையாக இருக்க முடியும்? தேவன் சகல அறிவையும் பெற்றிருக்கிறார். சகல அறிவையும் உடையவராக இருக்கிறர். ஆனால் இது வித்தியாசமான காரியம். ''பையன் ஒரு வளையத்தை பெற்றிருக்கிறான்'' என்று நாம் சொன்னால், அவன் ஒரு வளையம் என்று அர்த்தமல்ல. வளையமாக இருப்பதும் வளையத்தை பெற்றிருப்பதும் ஒன்றல்ல. தேவன் சர்வ ஞானி. அதாவது எல்லாவற்றையும் அறிந்தவராக இருக்கிறார். இந்த உண்மை தேவன் ஒரு தனிப்பட்ட நபராக இருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது. ஒரு தனிநபர் இல்லாமல் அறிவு இருக்க முடியாது. வெளிப்புற பொருட்களின் அறிவாற்றலை அறிவு சுட்டிக் காட்டுகிறது. தெய்வீக நபரல்லாதவர்களிடையே நல்லதும் தீமையுமான பொருட்கள் இருக்கின்றன.

தேவன் தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்கினார் (ஆதியாகமம் 1: 26,27) என்று நாம் வாசிக்கும் பொழுது, மனிதன் தேவன் அல்ல என்று நாம் அறிகிறோம். அவன் வெறும் தேவசாயலில் மட்டுமே சிருஷ்டிக்கப்பட்டான். தேவன் பூரணராக இருப்பதால் அவரது சாயலில் உண்டாக்கப்பட்ட மனிதன் தேவனுக்கு திருப்திகரமாக இருந்திருப்பான். அந்த மனிதன் அறிவைப் பெற்றிருந்தான். ஆனால் தேவனுடைய வசனத்தை புறக்கணித்தான். இப்படியாக அவனது புறக்கணிப்பினால் சில காரியங்களை கற்றுக் கொண்டான். அவன் என்ன கற்றுக்கொண்டான் என்பது வேத வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ''மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் (ஏலோஹிம்) ஒருவனைப் போல ஆனான்.'' (ஆதியாகமம் 3:22) இந்த கூற்று, தேவன் நன்மை தீமைகளை அறிந்திருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது.

தேவன் நன்மையிலிருந்து தீமையை அறியாதிருந்தால், அவர் நம்முடைய போதனையாளராக இருக்க முடியாது. தேவன் அவருடைய பிரமாணங்கள், அவருடைய கொள்கைகள் மூலமாக நமது சிந்தைக்கு முன்பாக எது நல்லது எது கெட்டது என்று வைத்திருக்கிறார்; ஆதாம் நன்மை மற்றும் தீமையை எப்படி பகுத்துப் பார்ப்பது என்பதை அறிந்திருந்தான். ஆனால் அவனது கீழ்ப்படியாமை, நன்மை மற்றும் தீமைகளை பற்றிய அறிவை அபிவிருத்தி செய்தது. அவனது விழுந்துபோன நிலைமையில் அவைகளை எல்லா சமயத்திலும் பகுத்துப் பார்க்க முடியாதவனாக இருக்கிறான். ஆகையால் தேவன் இஸ்ரேயலுக்கு ஒரு பிரமாணத்தைக் கொடுத்தார். அந்த பிரமாணத்தை பற்றிய மனிதனின் அறிவு, நன்மை மற்றும் தீமையை பகுத்துப்பார்க்க உதவியது.

பழங்கால வசனமாவது: ''நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக் கொண்டிருக்கிற தேவனாயிருக்கிறீர்.'' (ஏசாயா 45:15) எப்படிப்பட்ட உண்மை! இதனால் உலக ஞானத்தினால் தேவனை அறியவில்லை. அவன் ஞானம் மற்றும் அன்பின் அருகாமையில் இருக்கிறான். இருந்தும் புரிந்துகொள்ளும் கண்கள் திறக்கப்பட்டவர்கள் மட்டுமே தேவனை காண முடியும். ஆனால் குருடாக்கப்பட்ட அனைத்து கண்களும் தெளிவாக காணக்கூடிய காலம் வருகிறபடியால் நாம் சந்தோஷம் அடைகிறோம். ''பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்.'' (எண்ணாகமம் 14:21) ''சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல, பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.'' (ஆபகூக்2:14) பிறகு சகலரும் தேவன் உருவாக்கினதை காண்பார்கள். நமது தற்காலிக குருட்டுத்தனம், தேவனுடைய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமையின் மகிமையின் பிரகாசத்தை முக்கியப்படுத்தும்.

**"தேவன் அன்பாக இருக்கிறார்"**

தேவன் அன்பாக இருக்கிறார். அன்பு என்கிற வார்த்தை தெய்வீக குணலட்சணத்தின் மையக் கொள்கையை குறிப்பிடுகிற அர்த்தத்தில் சொல்லப்படுகிறது. தேவனில் இருக்கும் அன்புக்கு எதிர்மறையாக அங்கே ஏதுமில்லை. எங்கும் அன்பை தவிர வேறு எதுவும் இல்லை. அதாவது தேவன் எங்கும் இருக்கிறார். அன்பு எங்கும் இருக்கிறது என்று வேத வாக்கியங்கள் போதிக்கவில்லை. ஆனால் தேவன் நேசிக்கும் குணலட்சணம் உடையவராக இருக்கிறார் என்று அவைகள் போதிக்கின்றன. இது தேவன் நீதியுள்ளவராக, ஞானமுள்ளவராக வல்லமையுள்ளவராக இருக்கிறார் என்கிற மற்ற கூற்றுகளை எதிர்க்கவில்லை. தெய்வீக ஜீவியை குறிக்கிற சகலத்திலும் அன்பு என்கிற இந்த குணமே சிறந்தது. அவரது நீதி அனைத்தும் அவரது அன்புடன் இசைவாக இருக்கிறது. தீய அர்த்தத்தில் நீதி அல்லது வல்லமை அங்கே அப்பியாசப்படுத்தப்படவில்லை. ஏனெனில் அவரது சகல குணலட்சணங்களும் அவரது சகல சிருஷ்டிகளுக்கும் நன்மைக்கு ஏதுவாகவே கிரியை செய்கிறது.

அறிந்தவைகளையும் அறியாதவைகளையும் விவாதிக்க வேத வாக்கியங்கள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன. தேவன் மிகவும் உயர்ந்தவராக மிகவும் ஞானமுள்ளவராக இருந்தாலும் அவர் நீதியுள்ளவராகவும் அன்பு உடையவராகவும் இருக்கிறார் என்று அவைகள் கூறுகின்றன. நாம் எவ்வளவு அதிகமாக இந்த காரியத்தை கவனிக்கிறோமோ சர்வ வல்லவரைப் பற்றிய வேதாகமத்தின் விளக்கங்கள் அவ்வளவு நியாயமானதாக காணப்படும். அவரது வல்லமை விளக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். மகா வல்லமையுள்ளவரின் ஞானம் சந்தேகப்பட முடியாது. நாம் கவனிக்க வரும்போது, இப்படி ஞானமும் வல்லமையும் உடைய ஒருவர் அநீதியானவராக, உதார குணம் இல்லாதவராக இருக்கக்கூடுமா? நமது இருதயம் இருக்க முடியாது என்று பதில் கூறும்! நீதியும் அன்பும் இல்லாத ஒருவர் உண்மையிலேயே மிகவும் உயர்ந்தவராக இருக்க முடியாது. ஆகையால் நமது தேவனாகிய யேகோவா நிச்சயமாக இந்த குணலட்சணங்களை உடையவராக இருக்க வேண்டும்.

நாம் வேதாகமத்தோடு தொடர்புக்கு வந்து, குறிப்பாக அதன் போதனைகள் சிலவற்றை நாம் அறிந்து இருண்ட காலங்களில் சேர்க்கப்பட்ட தப்பறையானவைகளிலிருந்து விடுபட்ட பிறகு, அது தமது சிருஷ்டிகளுக்கு யேகோவா தேவனுடைய செய்தியாக நாம் கண்டுணர ஆரம்பித்தோம். இந்த பிரபஞ்சத்தின் மாபெரும் சிருஷ்டிகர் சர்வ வல்லமையுடையராக சகல ஞானமுடையவராக மாத்திரமல்ல, அன்பும் இரக்கமும் உடையவராகவும், நீதியை தமது சாம்ராஜ்யத்தின் ஆதாரமாக கொண்டிருக்கிறார் (சங்கீதம் 89:13,14) என்றும் அது

நமக்கு அறிவிக்கிறது. நமது சிருஷ்டிகர், அவரையும் அவரது நீதியின் கனிகளையும் நாம் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நம்மை தமது நீதியின் சாயலாகவும் தமது ரூபத்தின்படியும் சிருஷ்டித்ததில் சந்தோஷம் அடைந்தார் என்பதையும் கூட நாம் வேதாகமத்திலிருந்து கற்றுக்கொள்ளுகிறோம்.

தேவனுடைய சகல வல்லமையும்,சகல நீதியும், சகல ஞானமும் அன்பு என்கிற அவரது சொந்த குணலட்சணத்திற்கு இசைவாக பயன்படுத்தப்பட வேண்டும். ஆகையால் அது அன்புள்ள ஞானம் மற்றும் அன்புள்ள நீதியாக இருக்கும். சகல சிருஷ்டிகளின் நன்மைக்கு ஏதுவாக தமது அன்புள்ள வல்லமையை அப்பியாசப்படுத்துவதற்கு ஏதுவாக இவைகளை தேவன் பயன்படுத்துவார். அவர் மனிதனை சிருஷ்டித்தார். மனிதன் என்ன செய்வான் என்பதை முன்னரே அறிந்தார் என்பதையும், மனிதன் தவறு செய்ய அனுமதித்தார் என்பதையும் தேவன் நமக்கு சொல்லி, ஆதாம் தமது பிராமணத்திற்கு கீழ்ப்படியாதிருக்க அனுமதித்தார். (ஏசாயா 46:9,10)

பாவம் உலகில் நுழைய அனுமதித்ததில், இரண்டு முடிவுகளை தேவன் கருத்தில் கொண்டிருந்தார். கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமையின் பலன்களை பற்றிய விளக்கங்களை தூதர்களுக்கு கொடுக்க தேவன் உத்தேசித்தார். மேலும் அவர் மனித குடும்பம் இந்த அனுபவத்திலிருந்து ஒரு பாடத்தை பெறும்படி உத்தேசித்தார். மரித்தோரின் உயிர்த்தெழுதல் ஆரம்பதிலிருந்தே தேவனுடைய ஏற்பாடாக இருந்திருக்கிறது என்பதை இப்படியாக நாம் அறிகிறோம். ''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல் கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்பிக்கப்படுவார்கள்.'' (1 கொரிந்தியர் 15: 21,22) வேதவாக்கியத்தின் ஒரு பகுதியை போதனைக்கு அடிப்படையாக எடுத்தால் ஒரு பக்கம் உலகலாவிய வாதத்தை பற்றிய போதனையையோ, அல்லது தீமையை தேவன் திட்டமிட்டார் அல்லது இன்னும் என்னென்ன காரியங்களையோ நாம் காண்போம். எல்லாவிதமான குழப்பங்களிலும் நாம் விழுவோம். ஆனால் தேவனுடைய நீதி, ஞானம், அன்பு மற்றும் வல்லமையின் பூரணமான சரிகட்டுதலைக் காணும்போது, அவர் தீமையைக் குறித்த நல்ல திட்டங்களை பெற்றிருக்கிறார் என்பதை உணருவோம். அதன் தற்கால செல்வாக்கிலோ அல்லது முடிவான செல்வாக்கிலோ அது என்ன செய்ய வேண்டும், அது என்ன செய்யக்கூடாது என்பதை முழுவதும் குறித்து வைத்திருக்கிறார் என்பதை உணருவோம். இது தேவனுடைய குணலட்சணத்தில் நமக்கு நம்பிக்கையை தருகிறது.

### தீமையின் அனுமதி

ஒரே ஒரு நிலைப்பாட்டிலிருந்துதான் மனித சரித்திரத்தில் தெய்வீக ஞானம் மற்றும் அன்பை பகுத்துணர முடியும். அது வரவிருக்கிற யுகத்தை, மேசியாவின் நீதியான ஆளுகையின் காலத்தை உள்ளடக்க வேண்டும். ஆதாமின் சந்ததியின் அங்கத்தினர் ஒவ்வொருவரும், பலவீனத்தை சுதந்தரித்ததினால் பங்கு பெறுகிற பாவம் மற்றும் மரண தண்டனையிலிருந்து விடுதலை பெறுவது இந்த காலத்தில் தான் இருக்கும். முழு சந்தர்ப்பமும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டு கீழ்ப்படிதலினால் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் தேவனுடைய மகிமையின் முழு அறிவும் கொடுக்கப்படுவது இந்த காலத்தில்தான் இருக்கும்.

இப்படியாக இதுவரை போதிக்கப்பட்ட பாடம் தேவனுடைய நற்குணம் மற்றும் கண்டிப்பைப் பற்றி தான். அவரது நற்குணம் நம்மை ஜீவனுக்குள் கொண்டு வருவதற்கும் அவரது கண்டிப்பு தகப்பனாகிய ஆதாமின் தெரிந்து செய்த மீறுதலுக்கு தண்டனை கொடுப்பதற்குமாகும். மேலும் நீதி, உறுதியான நீதி பற்றிய பாடத்தை மனிதனுக்கும் தேவதூதர்களுக்கும் கொடுப்பதற்குமாகும். தேவன் அன்பாயிருக்கிறார் என்று தேவனுடைய அறிவுள்ள ஜீவிகளுக்கு போதிப்பது அடுத்த பாடமாகும். இந்த பாடங்களுக்கான அஸ்திவாரம் இயேசுவின் மீட்கும் பொருள்–பலியில் முன்னரே போடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இயேசு உலகின் இரட்சகராகவும் மீட்பராகவும் ஆகிறார். சிலர் இதை விசுவாசத்தினால் நம்பலாம். ஆனால் அநேகர் விசுவாசக் காதுகளையும் விசுவாச கண்களையும் பெற்றிருக்கவில்லை. தற்காலத்தில் பரிசுத்தவான்கள் மட்டுமே இந்த மகா உண்மைகளை சரியாக உணர்ந்து கொள்ள முடியும்.

தற்போது இரகசியமாகவும் சிலரால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய இது சீக்கிரத்தில் வானத்திலும் பூமியிலும் உள்ள அனைத்து ஜீவிகளுக்கும் வெளிப்படுத்தப்படும். பின்பு இயேசுவின் பலியினால் நிறைவேற்றப்பட்ட மீட்பு உலகலாவியது என்ற மாபெரும் உண்மையை அனைவரும் கண்டு உணர்ந்து கொள்ளக்கூடியவர்களாக இருப்பார்கள். ஆதாம் மற்றும் அவரது சந்ததியினர் அனைவர் மேலும் செலுத்தப்பட்ட பாவம் மற்றும் மரண தண்டைனயிலிருந்து ஒரு முழு மீட்பு என்றும் உணர்ந்து கொள்ளுவார்கள். அதை ஏற்றுக்கொள்கிற அனைவரும் தேவனிடமிருந்து அதை ஒரு பரிசாக பெற்றுக்கொள்வார்கள். மீதமுள்ளவர்கள் இண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

### இரண்டாம் மரணம் ஞானத்தின் சாரம்

தேவன் மனிதனை தமது ரூபத்தின்படியே சிருஷ்டித்திருந்தால் அவன் நீதிக்கடுத்த காரியங்களில் சுதந்திரமானவனாக இருப்பது அவசியமானதாக இருக்கிறது என்பதை நாம் சுலபமாக காண்கிறோம். இல்லையென்றால் அவன் தேவனுடைய ரூபத்தின்படி இருந்திருக்கமாட்டான். நீதிக்கடுத்த காரியங்களில் சுதந்திரமானவனாக அவன் படைக்கப்பட்டிருந்தால் தீமை அல்லது நன்மையை விரும்ப அவனுக்கு சக்தி அல்லது சலுகை இருந்திருக்க வேண்டும். அவனது அதிகாரத்தை தீய வழியில் அப்பியாசப்படுத்தினால் தேவன் அவனை அழிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார். மறுபுறம் நீதிக்கு இசைவாக அவன் ஜீவித்தால் தேவன் அவனுக்கு நித்திய ஜீவனை அளிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார்.

துன்மார்க்கனை இரண்டாம் மரணத்தில் அழிப்பது தான் ஞானத்தின் சாரம். அறிக்கையின்படி, துன்மார்க்கனை கவனிப்பதற்கு தேவன் சுத்தக்கண்ணனாக இருக்கிறார். (ஆபகூக்: 1:13) தேவனுடைய குணலட்சணம் அவ்வளவு பரிசுத்தமாகவும் நீதியாயும் இருப்பதாகவும், அவர் தொடர்ந்து துன்மார்க்கனை கவனிக்கமாட்டார் என்றும் ஆரம்ப கருத்து காணப்படுகிறது. அவர் தீமையை நித்தியகாலமாக அனுமதிக்க மாட்டார். ஏனெனில் இந்த நிலைமை அவருக்கு பிரியமில்லாதது.

இந்த கருத்து, கவனிக்கக்கூடிய பொல்லாங்கன் இருக்கிறான் என்று சுட்டிகாட்டுகிறது. அப்படியில்லையென்றால் அவர் எப்படி அதை கவனிக்கக்கூடும்? ஆனால் இவையெல்லாம் தெய்வீக திட்டத்திற்கு ஒத்திருக்கிறது. முடிவாக தீமைகள் அனைத்தும் அழிக்கப்படும். முடிவாக ''வானத்திலும் பூமியிலும், பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும் சமுத்திரத்திலுள்ளவைகளும், சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக'' என்று சொல்ல கேட்கப்படும். (வெளிப்படுத்துதல் 5:13)

R5211

# The Conflict between Flesh and Spirit
# மாம்சத்திற்கும் ஆவிக்கும் இடையேயான போராட்டம்

''மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளை செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.'' (கலாத்தியர் 5:17)

இந்த வார்த்தைகளை அப்போஸ்தலர், பழையவைகள் ஒழிந்துபோய், எல்லாம் புதிதாக்கப்பட்ட, கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டிகளாகியிருக்கிற கிறிஸ்தவர்களை நோக்கி கூறுகிறார். இவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். ஆகையால் அவர்கள் உண்மை நிலையில் ஆவியின் ஜீவியாக இருக்கிறார்கள். அவர்கள் உயிர்த்தெழுதலில் ''ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே'' ஆவியின் ஜீவியாக மறுரூபமாக்கப்படுவார்கள். அவர்கள் இன்னும் பூர்த்தியடையவில்லை. ஆனால் புது சிருஷ்டிகள் தற்காலத்தில் மாம்சத்தில் இருந்தே செயல்பட வேண்டும்.

புது சிருஷ்டி தனது உண்மைத் தன்மையை வெளிப்படுத்தி முதலாம் உயிர்த்தெழுதலில் ஆவியின் பூரணத்தன்மைக்கு தகுதியை மெய்ப்பித்து காண்பிப்பான் என்று தேவன் எதிர்பார்க்கிறார். அப்படிப்பட்டவர்கள் மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்திற்கு விரேதாமாகவும் இச்சித்து, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாக போராட்டம் போய்க் கொண்டிருப்பதை எதிர்பார்க்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இங்கு பயன்படுத்தப்படுகிற இச்சிக்கிறது என்ற வார்த்தைக்கு விருப்பம் என்று பொருள். புது சிருஷ்டி தேவனுக்கும் அவரது சித்தத்திற்கும் உண்மையாயிருக்க தீவிரமாக விரும்புகிறது. மாம்சமானது இவை அனைத்திற்கும் விரோதமாக இருக்க தீவிரமாக விரும்புகிறது

இந்த இரு ஆவிகளும் எதிர் எதிராக இருக்கின்றன. இரண்டும் விரோதமாக இருக்கின்றன. மாம்சம் தனக்குத் தானே ஊழியம் பண்ண விரும்புகிறது. அதற்கு பூமிக்குரிய ஆசைகளும் பூமிக்குரிய நோக்கங்களும் பூமிக்குரிய இலக்குகளும் உண்டு. புது சிருஷ்டி பரலோக காரியங்களில் ஆசை வைக்க விரும்புகிறது. மேலும் அது இனி பூமிக்குரிய நன்மைகளுடன் மனிதனாக வாழ விரும்பாமல் மாம்சத்தில் இருந்து கொண்டு ஆவியின் ஜீவியாக வாழவும் பூமிக்குரிய நன்மைகளையும் நோக்கங்களையும் எதிர்பார்ப்பையும் பலியிடவும் விரும்புகிறது.

**புது சிருஷ்டிகள் மாம்சத்தினால் தடைபண்ணப்படுகிறது**

தலைப்பு வசனமானது உலகத்திற்கு சொல்லப்படாமல் சபைக்கு சொல்லப்பட்டிருக்கிறது. சபையானது புது சிருஷ்டியாக பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறது. புது சிருஷ்டிகள் தங்களது பலியின் உடன்படிக்கையை கைவிட்டு மாம்சத்தின்படி நடந்தால் அவர்கள் மரிப்பார்கள். ஆனால் அவர்கள் மாம்சத்தின் செய்கைகளை அழித்து இவைகளை ஆவிக்காக முழுவதுமாக கைவிட்டால் அவர்கள் ஜீவிப்பார்கள், நித்திய ஜீவனை பெறுவார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுவில் நாம் அனைவரும் பரிசுத்தம், மாசின்மை, குற்றமின்மை ஆகியவைகளை காண்கிறோம்; அங்கே அப்படி ஒரு எதிரிடை இருக்கிறது; ஒரு வழியில் பூமிக்குரிய ஆசைகள் கவருகிறது. இன்னொரு வழியில் ஆவிக்குரிய ஆசைகள் கவருகிறது. இவைகள் எல்லாம் பரிசுத்தமான பூரண ஆசைகள். எனினும் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட புது சிருஷ்டியாக அவர் அவைகளை ஜெயங்கொள்ள கடமைப்பட்டிருந்தார்.

நமது கர்த்தரின் ஊழியம் முடியும் தருவாயில் அவரது வார்த்தைகளை நினைவு கூறுகிறோம். ''நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு. அது முடியுமளவும் நெருக்கப்படுகிறேன்.'' (லூக்கா 12:50) போராட்டம் போய்க் கொண்டிருந்தது. ஆனால் கர்த்தரின் ஆவி உறுதியாக இருந்தது; அவர் தமது பலியின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிந்தார். எனினும் அவர் பூரணராக இருந்து அவர் செய்ய விரும்பினவைகளை செய்யக் கூடியவராக இருந்தார். அவர் அவைகளை செய்து மாபெரும் வெற்றி பெற்றார்.

நமது காரியத்தில் நிலைமை வேறாக இருக்கிறது. நாம் விழுந்து போன சுபாவத்தில் இருக்கிறோம். நமது பசியும் ருசியும் சீரழிந்து இருக்கிறது. அனைவருமே ஏறக்குறைய சுயநலம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் சீரழிந்தவர்களாக இருக்கிறார்கள்.

நமது மாம்சம் சீரழிந்து இருக்கிறது. நாம் செய்ய வேண்டு –மென்றிருக்கிறவைகளை செய்ய முடியாதிருக்கிறோம். ஆகவே நமக்கு உதவி செய்ய கிறிஸ்துவின் புண்ணியம் தேவைப்படுகிறது. ஆகையால் புது சிருஷ்டியாக நாம் தவறு செய்திருக்கிறோம். அந்த தவறை உணர்ந்து, எதிர்கால உதவிக்காகவும் இரக்கத்தைப் பெறவும் கிருபாசனத்தண்டைக்கு செல்ல வேண்டும் என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். இப்படியாக நமது இருதயத்தின் உண்மைத் தன்மையை தேவனிடம் காண்பிக்க வேண்டும். கிறிஸ்துவின் சிந்தையையும் பண்பையும் பெற்றிருக்கும் சகலரும் விழுந்து போன மாம்சத்தினால், மாம்சத்தின் பலவீனத்தினால் தடை பண்ணப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு பரிகாரி ஒருவர் இருக்கிறார். அவர்கள் அவரிடம் சென்று இந்த விழுந்துபோன மாம்சத்தின் பலவீனங்களின் ஈடுகட்டுதலைப் பெறலாம்.

ஒரு கேள்வி எழலாம். நமது காரியத்தில் ஏன் மாம்சத்துக்கும் ஆவிக்கும் போராட்டம் இருக்க வேண்டும்? நாம் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கு முன்னர் கிறிஸ்துவோடு கூட பலியிடுகிறவர்களாக ஆக விருப்பங்கொள்ள நாம் எப்படி இந்த பலவீனங்களை போதுமானஅளவுக்கு ஜெயங்கொள்வது? முழு மனுக்குலமும் விழுந்துபோன நிலையில் இருக்கும்போது, விழுந்து போனவர்களில் அநேகர் தங்களது அவமான நிலைமையை உணர்ந்து, நீதி செய்ய விரும்புகிறார்கள். ஆனால் அதுமாதிரி செய்ய முடியவில்லை. அவர்கள் தங்களை பாவத்தின் அடிமைகளாக காண்கிறார்கள். அவர்கள் பலவீனர்கள்; தாங்கள் விரும்புகிறவைகளை செய்யக் கூடாதபடி கட்டப்பட்டிருக்கிறார்கள். யூதர்களில் அநேகர் இந்த நிலைமையில் இருந்தார்கள். அவர்கள் தேவனுடைய சித்தத்தை செய்ய விருப்பம் உடையவர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்களால் அது போல செய்ய முடியவில்லை. அங்கே விருப்பம் இருந்தது. அங்கே சித்தம் இருந்தது. ஆனால் அவர்களது விழுந்து போன நிலைமையில், அவர்களது மனதின் மற்ற பண்புகள் எதிராக இருந்தன.

மனித சிந்தை பல்வேறு பண்புகளால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. பாவம் நுழைந்த போது மனுக்குலத்திலிருந்து ஆதியிலிருந்த தேவனுடைய சாயல் அளவிடக்கூடிய அளவுக்கு அகன்று போகும் வரை ஆதி மனிதனின் இந்த தாழ்ந்த அடிப்படை பண்புகள் அதிகரித்து உயர்ந்த பண்புகள் அகன்று போயின. ஆனால் ஆதாமின் சில குமாரர்கள் மற்றும் குமாரத்திகளிடத்தில் பாவத்தை எதிர்க்கவும் சீர்த்திருத்த வாழ்வை பெறவும் நாடக்கூடிய அளவுக்கு போதுமான

தேவனுடைய சாயல் இருந்தது. புற ஜாதிகளிடத்திலும் கூட இப்படிப்பட்ட நல்ல உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகிறது.

யூத யுகத்தில் யூதர்களிடையே சிலர் தேவனுக்கு இணக்கமாக வாழ நாடினார்கள். மற்றவர்கள் பேலியாளின் மார்க்கத்தை பின்பற்றி சாத்தானுக்கு ஊழியம் செய்து, தங்களை சுயநலத்திற்கு ஒப்புக் கொடுத்தார்கள். இன்றைக்கும் அப்படியே இருக்கிறது. யூதர்கள் தங்கள் பிரமாணத்தை கடைபிடிக்க முடியவில்லை. அதை முறைப்படி கடைபிடிக்கவில்லை என்றால் நித்திய ஜீவனை அவர்கள் பெற முடியாது. பிரமாணத்திற்கு கீழாக இருந்திராதவர்களுக்கும் இதே தான் நடக்கும். பெந்தெகொஸ்தே நாளிலிருந்து வேறொரு ஏற்பாடு இருந்தது. தேவன் ஒரு இரட்சகரை கொடுத்திருக்கிறார். அவரது மரணம் உலகத்தின் பாவத்திற்கு பயனளிக்கக் கூடியதாக இருக்கிறது.

### மரணத்தோடு இந்த போராட்டம் முடிகிறது

பிறகு ஏன் இந்த மரணம் இன்னும் உலகிற்கு பலனளிக்கவில்லை? தேவனுடைய ஊழியத்தில் தங்கள் ஜீவனைக் கொடுக்க விருப்பமுள்ள ஒரு வகுப்பினரை கண்டுபிடிக்க தேவன் விரும்புகிறார். ஆதாமின் விழுந்து போன பிள்ளைகளில் சிலர், தேவனுடைய வசனத்தின் அழைப்பை கவனித்து கிறிஸ்துவின் அடிச்சுவட்டை பின்பற்றுகிறவர்களாவதற்கு, போதுமான குணலட்சண பலத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களது தீர்மானத்தை, அவருடைய ஊழியத்திற்காக தங்களது வாழ்க்கையை அர்ப்பணிப்பதன் மூலம் வெளிப்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட ஓர் அர்ப்பணம் மனதின் உயர்ந்த பண்புகள் இணைந்திருக்கிறதாகவும் மனதின் தாழ்ந்த பண்புகள் கட்டுக்குள் இருப்பதாகவும் பொருள்படுகிறது.

தேவனுடைய வாக்குத்தத்தம் மற்றும் சுவிசேஷ செய்தியின் ஊக்க மூட்டும் செல்வாக்கின் கீழ், அவர்கள் மாபெரும் பரிகாரியின் மூலமாக கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாக, அவரது சரீரத்தின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அது முதல் தேவனுடன் ஒரு உறவை பெற்றிருக்கிறார்கள். பிறகு அவர்கள் சாத்தானுடைய கண்ணிகளுக்கு எதிராக தொடர்ந்து போராடி ஒவ்வொரு படியாக முன்னேறிப் போக எதிர்பார்க்கப்படுகிறார்கள். இது தான் கிறிஸ்தவனின் வாழ்க்கை, தலைப்பு வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போராட்டம். மாம்சம் மற்றும் ஆவி இரண்டும் எதிரானவைகள். ஆகையால் தான் இந்த போராட்டம்.

வெளியே சென்று மற்றவர்களுடன் போராட வேண்டிய அவசியமில்லை. உள்ளேயே போராட வேண்டியது அநேகம் இருக்கிறது. தங்களுடைய முயற்சிகளின் மூலமாக தங்களது உண்மைத் தன்மையை காண்பிக்கிறவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள் ! ஏற்ற காலத்தில் முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையால் பழைய சரீரத்தை முற்றிலுமாக விட்டுவிட்டு சாகாமையினால் அணிவிக்கப்படுவார்கள். நாம் ''மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்தால்'' நமது தலையானவராகிய கர்த்தரைப் போல இருப்போம்; அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைக் காண்போம், அவரது மகிமையில் பங்கு பெறுவோம்.

எனினும் தொடர்ச்சியான மாபெரும் போராட்டம் இருக்கிறது. புது சித்தம் தன்னை உறுதிப்படுத்திக் கொண்டு சரீரத்தை புது சித்தத்திற்கு கீழ்ப்படியப்பண்ண பலவந்தப்படுத்துகிறது. எனினும் அழியக்கூடிய சரீரம் உண்மையில் இன்னும் மரிக்காமல் இருந்து. உலகம் மற்றும் சத்துருவினிடம் தொடர்ச்சியான தொடர்பை கொண்டிருக்கிறது. இன்னும் அது புது சித்தத்திற்கு கீழ்ப்படியாமல் இருப்பதற்கு இவைகளாலும் பூமிக்குரிய அக்கறை, நோக்கங்கள், முறைமைகள், முயற்சிகள், போராட்டங்கள் ஆகியவைகளாலும் தொடர்ந்து தூண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பரிசுத்தவான் உள்ளேயும் புறம்பேயும் போராடுகிற அனுபவமில்லாமல் இருக்க முடியாது. அது மாபெரும் பரிசுக்காக முடிவு பரியந்தமுமான போராட்டமாக இருக்க வேண்டும். அந்த பரிசுக்காகத்தான் நாம் போராடுகிறோம். ஏனெனில் புது சிருஷ்டி கர்த்தரின் கிருபையினாலும் பலத்தினாலும் அழியக்கூடிய சரீரத்தை மீண்டும் மீண்டும் அடக்கி ஆளுகிறது. எனினும் போராட்டத்திற்கு மரண பரியந்தம் முடிவில்லை.

''உன்னுடனான போராட்டம் எப்படி போகிறது?
சகல தீய காரியங்களுக்கு எதிராக வாழ்நாள் முழுதும் போராட்டம் ?
உன்னுடையது குறைவான விரோதமல்ல, உன்னுடையது சுயநல நோக்கமல்ல.
அது ராட்சதர்களுக்கும் ராஜாக்களுக்குமான போர்!

*****

''போராட்டம் நீண்ட நாட்கள் என்று சொல்லாதே;
அது ஒரே ஒரு போராட்டம்; போராட்டம் முடிந்தது.
''உனது வெற்றியைக் கொடுக்க இரண்டாவது போர் இல்லை.''
''அந்த ஒன்று என்றென்றைக்குமான வெற்றி!''

R5212

## Discerning The Will of God
## தேவனுடைய சித்தத்தை பகுத்துணர்தல்

''கர்த்தாவே, உமது வழியை எனக்குப்போதியும்.'' (சங்கீதம் 27:11)

நாம் தரிசித்து நடப்பதை கர்த்தர் விரும்பவில்லை. இதனால் தேவனுடைய சித்தத்தை பகுத்துணர்வதில் கஷ்டம் இருக்காது. ஆகையால் இந்த வழியில் நமது கீழ்ப்படிதலும் விடாமுயற்சியும் சோதிக்கப்படும்படி செய்கிறார்; ஏனெனில் நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டும். இதை செய்வதற்கு நாம் அனுதினமும் எல்லாவற்றையும் கர்த்தரிடம் ஜெபத்தில் எடுத்துச் செல்ல வேண்டும். எந்த காரியத்தையும் கர்த்தருடைய சித்தத்தை அறிய நாடாமல் எடுக்கக் கூடாது.

நமது அனுதின வாழ்க்கையில் சகல காரியங்களிலும் தேவனுடைய சித்தத்தை அறியக்கூடிய வியக்கத்தக்க நுண்ணறிவு நமக்கு இல்லாததால், அவரது சித்தத்தை எப்பொழுதும் பகுத்துணரக் கூடாதவர்களாக இருக்கிறோம். ஒரு காரியத்தைக் குறித்து வேதவாக்கியங்கள் அறிவுரை கொடுத்தால், வழி தெளிவாக இருக்கும்; கீழ்ப்படிதலுள்ள தேவனுடைய பிள்ளை கடைபிடிக்கக் கூடிய ஒரே மார்க்கமாக அது இருக்கும். ஆனால் காரியம் ஒருவரது சொந்த கருத்தை சார்ந்து இருக்குமானால், பிறகு வழி தெளிவாக இல்லை. நமது கருத்து போதுமானதாக இராது என்பதை உணர்ந்து, அதை முடிவு செய்வது நமது அறிவுக்கு அப்பாற்பட்டு இருப்பதால், நாம் காரியத்தை தேவனிடம் விட்டுவிட வேண்டும்.

நாம் நம்மை கர்த்தரின் பொறுப்பில் ஒப்புக்கொடுத்தால் அவர் நம்மை வழி நடத்துவார் என்பதை நாம் அறிவோம். ஆகையால் நாளின் ஆரம்பத்தில் நாம் இவ்விதமாக சொல்லலாம்: ''கர்த்தாவே,

அடியேன் இருக்கிறேன். இன்னொரு நாளை நீர் கொடுத்தமைக்காக உமக்கு நன்றி கூறுகிறேன். இந்த நாள் சத்தியத்துக்கும் சகோதரர்க –ளுக்கும் ஊழியம் பண்ண முழுமையான சந்தர்ப்பத்தை கொடுக்கும் என்று நம்புகிறேன். உமக்கு பிரியமான ஊழியம் செய்யும்படி என் சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் நடக்கைகளை வழி நடத்தும்.'' பிறகு நாம் போய் நமது நல்ல தீர்மானத்தின்படி செய்யலாம்.

கர்த்தர் நம்மை ஒரு திசையில் அல்லது வேறு திசையில் வழி நடத்த விரும்பினால், அது அவருடைய பங்கு, நமக்குரியதல்ல. அவரது வழிநடத்துதலுக்காக ஜெபித்தோம். எப்படியாவது அவரது சித்தத்தை அறிந்து அதன்படி செய்ய நமது கண்கள் விழிப்புடன் இருக்கின்றன. தேவன் தமது மகிமைக்காகவும் நமது நன்மைக்காகவும் சகலத்தை அவர் ரத்து செய்ய முடிந்தவராகவும் விருப்பம் உள்ளவராகவும் இருக்கிறார் என்பதை அறிந்து, இந்த மனோபாவத்தில் சுலபமாக இளைப்பாறலாம்.

சிலர் ஒரு குழந்தையைப் போல, அவர்களது சகல காரியங்களுக்கும் கர்த்தரிடம் செல்லும் ஒரு குறிப்பிட்ட வழியை கொண்டிருந்ததை நமது ஆசிரியர் கவனித்திருக்கிறார். அவர்கள் தங்களது வேதாகமத்தை, நோக்கம் ஏதுமில்லாமல் திறப்பார்கள். அவர்களுடைய கட்டை விரல் அல்லது விரல் எந்த இடத்தில் படுகிறதோ அதுதான் அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த செய்தி என்று எண்ணுவார்கள். அதை மிகவும் ஜாக்கிரதையாக கடைபிடிப்பார்கள். சில சமயங்களில் அவர்களுக்கு அந்த வசனம் தான் தங்களது ஜெபத்திற்கான குறிப்பிடத்தகுந்த பதிலாக காணப்படும்.

இந்த முறைமை தவறான ஒன்று என்று ஆசிரியர் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அது அவரது கருத்துக்கு மேல் முறையீடாக இல்லாததால், இந்த காரியத்தை கர்த்தரிடம் எடுத்துச்சென்று அவர் கூறியதாவது: ''பிதாவே, இந்த திட்டத்தை பின்பற்ற உண்மையிலேயே பயப்படுகிறேன். இது உங்களை மகிழ்வித்தால், இந்த முறைமை மூலமாக நடத்துவதைக் காட்டிலும் எனது கருத்து மூலமாக வழி நடத்தும். ஏனெனில் எனது சிந்தை அதை ஏற்றுக்கொள்ள தகுதியுள்ளதாக காணப்படவில்லை.'' கர்த்தர் அவரது வார்த்தையை எடுத்துக்கொண்டதாக காணப்படுகிறது.

ஒவ்வொரு காரியத்திலும், ஏன் சரி என்பது சரி, என்பதற்கான ஒரு காரணம் நிச்சயமாக இருக்கிறது. அதை அறிந்துகொள்ள நாம் விரும்ப வேண்டும். தேவன் ஒரு காரியத்தில் அந்த வழியைக் காட்டிலும் இந்த வழியை ஏன் விரும்புகிறார் என்பதை அறிந்து கொள்ள விரும்ப வேண்டும். நாம் அவரது ஞானத்தை சந்தேகப்படுகிறோம் என்பதல்ல. ஆனால் தெய்வீக ஏற்பாட்டின் ஆவிக்குள்ளாக நாம் நுழையலாம். நாம் ஆலோசிக்கிற விஷயம் குறித்த எல்லா வேத வாக்கியங்களையும் ஆராய்ந்து தேவனுடைய தொடர்புகள் மற்றும் போதனைகளின் அடிப்படை கொள்கையை காண முயற்சிப்பதே தேவனுடைய வழிகாட்டுதலை நாடுகிற ஆசிரியரின் முறையாக இருக்கிறது.

மற்றதைக் காட்டிலும் இந்த முறைமையினால் அவர் இன்னும் அதிக சந்தோஷத்தை பெறுகிறார். மற்ற முறையை பின்பற்றுவதின் மூலம், வேதாகமத்தை அவருக்காக திறப்பது தேவனா, அல்லது சாத்தானா அல்லது தற்செயலாகவா என்பதை அவரால் அறிய முடியவில்லை. தேவனுடைய வசனத்தின் போதனையாக அவர் நம்புகிறதை பின்பற்றுவது அதிக பிரியமாக அவருக்கு இருக்கிறது. அதாவது காரணம் மற்றும் தீர்மானத்தில் பிதாவானவரின் வழி நடத்துதலைக் கேட்டு எல்லாவற்றையும் ஜெபத்தில் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்து அதன்பிறகு போய் தன்னால் முடிந்தவரை அந்த காரணத்தையும் தீர்மானத்தையும் பின்பற்றுவது ஆகும். தேவன் அவரது கருத்தை ஒரு வழியில் பயன்படுத்த அனுமதித்து, பிற்பாடு அது சிறப்பானதாக காணப்படாதிருந்தாலும் தேவன் அதை சில மாபெரும் ஆசீர்வாதத்தை அல்லது பிரயோஜனமான பாடத்தை கொண்டு வருவதற்காக பயன்படுத்துகிறார். பிதாவின் வசனத்தையும், அவரது தெய்வீக வழி நடத்துதலையும் அவர் புரிந்து கொள்ளுவதைத்தான் நிச்சயமாக, கருத்தின் மூலம் அர்த்தப்படுத்துகிறார். இப்படியாக செய்து, சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்பதை அவர் அறிவார். (ரோமர் 8:28)

**R5212**

## The Oneness of the Body of Christ
## கிறிஸ்துவின் சரீரத்தின் ஒருமைப்பாடு

''எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. அந்தப் பிரகாரம் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.'' (1 கொரிந்தியர் 12: 12,13)

நாம் அனைவரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம். பல அங்கங்கள் அடங்கிய மனித சரீரத்தின் உருவம், பொதுவான நன்மைக்காக பொதுவான நோக்கத்தின் நிறைவேறுதலுக்காக, ஒரு வேலையாக சேர்ந்து செயல்படுகிறது. இது அகில உலகத்தினாலும் பயன்படுத்தப்படுகிற ஒரு மனதின் படம். இது சபையை வரையறுக்கக் கூடியதல்ல. நாம் நமது அரசாங்கத்தின் தலைவராகிய, தலைமை அதிகாரி, ஜனாதிபதியைப் பற்றி பேசுகிறோம். நாம் காங்கிரஸ் சபை மற்றும் செனட் சபையைப் பற்றியும் இந்த சபைகளின் பல்வேறு அங்கங்கள் பொது நன்மையின் ஒரு வேலைக்காக ஒத்துழைப்பது பற்றியும் பேசுகிறோம்.

இந்த சுவிசேஷ யுகத்தில், தேவனுடைய ஜனங்களாக விசேஷமாக அழைக்கப்படுகிறவர்கள், அவர்கள் யூதரிலிருந்து அழைக்கப்பட்டாலும் புற ஜாதியாரிலிருந்து அழைக்கப்பட்டாலும் ஒரே சரீரமாக இருக்கிறார்கள். ஏனெனில் சரீரமானது ஒன்று, சரீரம் பிரிந்திருக்கவில்லை. இந்த காரியத்தில் கிறிஸ்துவின் (சபை) சரீரம் இன்றைய அரசியல் சபையிலிருந்து மாறுப்பட்டது. உதாரணத்திற்கு, அமெரிக்காவில் குடியரசு கட்சியும் ஜனநாயக கட்சியும் இருக்கின்றன. விரும்பத்தக்க காரியங்களில் அவை ஒத்துப் போவதில்லை. ஆனால் சபையானது கிறிஸ்துவின் ஒரு சரீரமாக இருப்பதாகவும் அநேக அங்கங்கள் ஒரு சரீரத்தை உண்டாக்குகிறது என்றும், அனைத்து அங்கங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளதாக இருக்கிறது என்றும் அப்போஸ்தலர் மூலமாக கர்த்தர் கூறுகிறார்.

கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் அனைவரும் ஒரே வேலை, ஒரே நோக்கம் அல்லது இலக்கு, அந்த நோக்கத்தை நிறைவேற்ற ஒரே முறைமையை பெற்றிருக்கிறார்கள். தேவனுடைய புகழை

காண்பிக்கும்படியாக ஒரு விசேஷித்த ஊழியத்துக்காக அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். உலகமானது ராஜா அல்லது ராணி, அல்லது சபை பிரிவு இன்னும் மற்றவைகளை புகழ்வார்கள். ஆனால் இந்த வகுப்பார் தேவனுக்கு ஊழியம் செய்வதே ஒரே நோக்கமாக, ஒரே இலக்காக கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உலகில் தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.

தேவனே, பிரபஞ்சத்தின் உண்மையான சக்கரவர்த்தியாக அல்லது ஆளுனராக இருக்கிறார். ஆனால் அவரது குடிமக்கள், அவரது ஆதிக்கத்தில் இந்த பூமியில் உள்ளவர்கள் மட்டுமே மரணம் என்ற சாபத்தின் கீழாக இருக்கிறார்கள். அதே நிலைமையில் அவர்களை விட்டுவிட தேவன் உத்தேசிக்கவில்லை. அவர் முடிவாக இந்த சாபத்திலிருந்து நீக்கி ஒரு ஆசீர்வாதத்தை கொண்டு வர உத்தேசிக்கிறார்.

கடந்த காலத்தில் வாழ்ந்த அநேகர் இந்த நோக்கத்தை கேட்டும், புரிந்துகொள்ளவில்லை. புரிந்து கொண்ட அநேகர் நீண்ட காலமானதால், அவர்களது நம்பிக்கைகள் கடந்து போயின. தேவனுடைய திட்டம் தோல்வியடையவில்லை என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. அவரது தற்கால திட்டம் சபையை தெரிந்துகொள்ளுதல் அல்லது தெரிந்தெடுத்தல், இதன் நோக்கம் தெரிந்தெடுக்காதவர்களை ஆசீர்வதிக்கவே என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. உலக தோற்றத்திற்கு முன்னரே தேவன் இந்த நோக்கத்தை தமது மனதில் பெற்றிருந்தார், அதை நிறைவேற்றுவார். தேவன் சபையை, லோகாஸ், மத்தியஸ்தர், தேவகுமாரனுடன் அவரது ராஜ்யத்தில் இணையும்படி தெரிந்து கொண்டு வருகிறார்.

### சரீரத்தின் ஒருமைப்பாடு விளக்கப்பட்டிருக்கிறது

தற்போது அழைக்கப்படுகிற அனைவரும் பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலை பெறுகிறார்கள். அவர்கள் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறார்கள். அவரது அங்கங்கள் தற்கால பாடுகளில் அவருடன் பங்கு பெறுகிறார்கள். வரப்போகிற மகிமையிலும் அவர்கள் உடன் பங்காளிகளாக இருப்பார்கள். பாடத்தின் குறிப்பிட்ட அம்சத்தை அப்போஸ்தலர் இங்கே விவரிக்கிறார். ஒரு அங்கம் இன்னொரு அங்கத்தை பார்த்து, ''நீ தேவை இல்லை'' என்று சொல்ல முடியாது. ஏனெனில் தேவன் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் அதனதன் இடத்தில் தமது விருப்பம் போல் வைத்திருக்கிறார். அதில் ஏதாவது ஒரு அங்கம் இல்லையென்றால் ஒருவர் தன் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்த தவறினால், சரீரம் முழுமை அடையாது.

இந்த காரியங்களை கருத்தில் கொண்டு ஒருவருக்கொருவர் தயவுள்ளவர்களாக இருக்க வேண்டும். மனித சரீரத்தில் பிரிவினை கிடையாது. ஒரு கை இன்னொரு கையிலிருந்து தனித்து இருக்கிறது. கைக்கும் காலுக்கும் பிரிவினை இருக்கிறது. ஆனால் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்திற்கும் செய்ய வேண்டிய வேலை ஒன்று உண்டு. கையும் காலும் தலையினால் இணைத்து வைக்கப்படுகிறது. மூளையானது நரம்பின் மூலமாக சரீரத்தின் சகல அங்கங்களுடனும் தொடர்பு வைத்துள்ளது. போஷாக்கு மைய நிலையத்திலிருந்து சரீரத்தின் பல்வேறு பாகங்களுக்குச் செல்கிறது. இதே போலவே ஆவிக்குரிய சரீரத்திலும் இருக்கிறது. நாமெல்லோரும் ஒரே வேலையை செய்வதில்லை. செய்யப்படும்படியான பல்வேறு வேலைகளை தேவன் வைத்திருக்கிறார். இந்த பகுதிக்கு செய்யும்படியான ஒரு வேலையைத் தருகிறார். இன்னொரு பகுதிக்கு வேறொரு வேலையை தருகிறார்.

ஒரு அங்கம் துன்பப்பட்டால் இன்னொரு அங்கம் உதவிக்கு வருகிறது என்று அப்போஸ்தலர் மேலும் சொல்லுகிறார். கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு அங்கம் பாடுபட்டால் மற்ற அனைத்து அங்கங்களும் அதனுடன் பாடுபடும். தலைமை அங்கமாகிய கிறிஸ்துவுக்கு தெரியாமலும் தயவு இல்லாமலும் எந்த அங்கமும் வியாதிப்பட முடியாது. தர்சு பட்டணத்தானாகிய சவுலிடம் நமது கர்த்தர் கூறியதாவது: ''நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே.'' சவுல் சபையின் சில அங்கங்களை துன்பப்படுத்தினால் அவர் இயேசுவை துன்பப்படுத்துகிறார். அந்த அங்கம் இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவராயிருந்தாலும் இன்றைய நாளில் வாழ்கிறவராயிருந்தாலும் அது ஒரே சரீரம். எல்லாருக்கும் பிதாவும் தேவனுமானவர் ஒருவரே, இரட்சகராகிய இயேசுவும் கர்த்தரும் ஒருவரே. அனைவரும் கட்டுப்படுத்தப்படுவதும் வழி நடத்தப்படுவதும் ஒரே பரிசுத்த ஆவியினாலேயாகும்.

கிறிஸ்து இயேசுவுக்கும் அவரது சரீர அங்கங்களுக்கும் இடையே உள்ள இந்த ஒருமைப்பாட்டை கவனிப்பது ஆசீர்வாதமானது. நமது கர்த்தர் சகல மகிமையையும் சுய நலமாக கவர்ந்து கொண்டு அதை தானே வைத்துக் கொள்ளுகிறவர் அல்ல. மாறாக, அன்பான அக்கறையுடன், தம்மைப் போன்ற குணலட்சண சாயலில் அவரது சரீர அங்கங்கள் முன்னேறுவதை கவனிக்கிறார். அவர் கூறுகிறதாவது: ''அவர்கள் என்னுடையவர்கள், அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன்.'' (யோவான் 17:10) அவர்கள் அனைவரும் தேவனுடைய அன்பினாலே கர்த்தரோடு கூட கட்டப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர் மேல் வந்த அனைத்து தீவிர சோதனைகளிலும் அவரது உண்மைத் தன்மைக்கும் கீழ்ப்படிதலுக்கும் பரிசாக அவருக்கு பிதாவானவர் அளித்திருக்கிற மகிமையில் அவர்களையும் அவரோடு கூட பெற்றிருப்பார்.

தெய்வீக குடும்பத்தில் அனைவரும் அன்பு, ஐக்கியம், நம்பிக்கை, தயவு, இசைவு மற்றும் பொதுவான அக்கறை ஆகியவற்றில் ஒரே பந்தமாக கட்டப்பட்டிருக்கிறார்கள். ஒருவரின் கனமும் மகிமையுமே சகலரின் கனமும் மகிமையுமாக இருக்கும். இந்த ஒருமைப்பாடு பெருகியிருக்க வேண்டும் என்பதே கர்த்தரின் ஜெபத்திலே வேண்டுகோளாக இருந்தது. இந்த வசனத்தை கவனியுங்கள்: ''அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் ஒன்றாயிருக்கிறது போல (உமது ஆவி அல்லது மனச்சார்பு, நோக்கம், குறிக்கோள் எல்லாம் ஒன்றாயிருக்கிறது போல) அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.'' (யோவான் 17:21) பிதாவின் ஆவி, குறிக்கோள் மற்றும் நோக்கம் ஆகியவைகளை நமது முழு வல்லமையையும், வைராக்கியம் மற்றும் உண்மைத் தன்மையோடு பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மனிதனுடைய ஊழியனாக இராதே : உன்னை தம்முடைய வல்லமையான அடிமையாக ஆக்க கொடுக்கப்பட்ட மதிப்பான விலை என்று சிந்தி, பூரண சுதந்தரம் அவருடைய ஊழியம். இது உனது இருதயத்தில் நன்றாக பதிந்திருப்பதாக. அவரது உரிமைகோரல் உனக்கு பெரியது. உனக்கு ஊழியம் செய்வதே அவருக்கு எல்லாமாக இருக்கிறது. கிறிஸ்துவின் சகோதரருக்கு இங்கே உதவி தேவை.

அவர்களில் நீ அவருக்கு ஊழியம் பண்ணு. எல்லாரிலும் தாழ்ந்தவன் இன்னும் அவரது அங்கம் அன்பரே. இரட்சிப்பதற்கு அவரது வாழ்க்கை இரத்தம் பலவீனமான விலை.

# The Gospel of Hope
# நம்பிக்கையின் சுவிசேஷம்

ஹவானாவில் நமது பொது கூட்டத்தை தொடர்ந்து, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஸ்திரீ, தான் கேட்டவைகள் எல்லாம் மிகவும் சந்தோஷத்தை கொடுத்தன என்று முன்வந்து தனது கருத்தை வெளிப்படுத்தினாள். தேவனுடைய அன்பு மற்றும் அக்கறையைக் குறித்தும், தற்கால ஜீவியத்தில் சத்தியத்தின் ஆறுதல் மற்றும் எதிர்கால ஜீவியத்தின் நம்பிக்கைகளைக் குறித்தும் ஜனங்களுக்கு நாம் கொடுத்த எதிர்கால கண்ணோட்டத்தைக் குறித்த செய்தியை அவள் மெச்சியதாகக் கூறினாள்.

இந்த ஸ்திரீ கூறியதாவது: ''பாஸ்டர் ரசல் அவர்களே, உங்களது பிரசங்கத்தில் சொல்லப்பட்ட இதே நம்பிக்கையின் ஆவியை காவற் கோபுர வாசகர்களுக்கு செலுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். வேதாகம போதனைகளில் உமது பிரசங்கத்தில் மிகவும் ஆர்வமுள்ள சிலருடன் எனக்கு நல்ல பழக்கம் கிடைத்தது. ஆனால் அவர்கள் துக்கம் நிறைந்த மற்றும் அதைரியப்படுத்தும் காரியங்களில் மிகவும் ஈர்க்கப்பட்டு நம்பிக்கையிலும் நல்ல காரியங்களிலும் பார்வை இழந்தவர்களாக காணப்படுகிறார்கள். அவர்கள் தங்களையும் மற்றவர்களையும் துன்பப்படுத்துகிற அளவுக்கு வரப்போகிற ஆபத்தின் காலத்தில் வாழ்கிறவர்களாக காணப்படுகிறார்கள். எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையின் ஆவியை அதிகமாக அவர்களுக்கு செலுத்தினால் அவர்களையும் அவர்களை சுற்றி இருக்கிற மற்றவர்களையும் இன்னும் அதிக சந்தோஷமுள்ளவர்களாக ஆக்க முடியும் என்று நான் நம்புகிறேன். உம்முடைய பிரசங்கம் சத்தியமாக இருந்தால், சத்தியமாக காணப்படுகிறது. அவர்கள் சத்தியத்தை பரப்புவதில் இன்னும் அதிக முன்னேற்றத்தை அடைவார்கள் என்று நான் நம்புகிறேன்.'' இந்த காரியங்களை காவற்கோபுற வாசகர்களுக்கு முன் வைக்க உறுதியளித்தோம். அதே போல இப்பொழுது செய்து கொண்டிருக்கிறோம்.

### நம்பிக்கை உங்களுக்கு தேவைப்படுகிறது

அப்போஸ்தலர் எழுதுகிறதாவது: ''உங்களுக்கு பொறுமை தேவைப்படுகிறது.'' ''உங்களுக்கு நம்பிக்கை தேவைப்படுகிறது,'' என்று நாங்கள் அதோடு இதை சேர்க்கும் பொழுது அப்போஸ்தலரின் கூற்றை நாங்கள் மறுக்கவில்லை. நம்பிக்கையில்லாமல், பொறுமை சீக்கிரத்தில் வியர்த்தமாகிப் போகும். ஆகையால் குணலட்சணத்தின் நீளம், அகலம் மற்றும் ஆழத்தை எதிர்பார்க்க முடியாது. நிஜமான சுவிசேஷ வசனம் முழுவதும் நம்பிக்கை நிறைந்ததாக இருக்கிறது. ஏனெனில் அதன் பொருள் நற்செய்தி. ஆகையால் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவர்கள் தமது செய்தி ஒரு நற்செய்தியாக, ஒரு நம்பிக்கையாக இருக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். உண்மைதான், சில சமயங்களில் நாம் அருகாமையில் பார்க்கப் போகிற ஆபத்துக் காலத்தைக் குறித்து கூறுவது சரியானதும் அவசியமானதுமாக இருக்கிறது. எனினும் அந்த பாடம் நற்செய்தியின் நிலையில் இருந்து அணுகுதல் வேண்டும். ஆபத்துக் காலத்தை பற்றி நாம் குறிப்பிடுவது ஜனங்களை எச்சரிக்க மட்டுமே; நற்செய்தியின் ஒரு பகுதியாக அது சொல்லப்பட கூடாது. மகா ஆபத்தின் நாளை குறிப்பிட தேவைப்பட்டால், அந்த கரிய மேகம் கொஞ்ச காலத்திற்கு மாத்திரம் விரைவில் வரக்கூடிய கிறிஸ்துவின் நாளின் விடியற்காலையை மறைக்கும் என்று நாம் குறிப்பிடலாம். கிறிஸ்துவின் நாள் என்பது சந்தோஷமும் ஆசீர்வாதமுமான நாள். உலகின் யூபிலி, சாபத்தை நீக்கி தேவனுடைய ஆசீர்வாதத்தை கொண்டு வரும் நாள் ஆகும்.

### சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவிக்கிறது

பெரும்பாலான உலக ஜனங்கள் மற்றும் கர்த்தரின் அர்ப்பணம் செய்து கொண்ட ஜனங்களும் கூட மகா ஆபத்தின் நாள் சம்பந்தமாக தற்காலத்தில் அதிகமான துன்பத்தினால் தேவையில்லாமல் திகிலடைந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் உலகமானது எதிர்காலத்தை பற்றிய மறைவான பயத்தைக் கொண்டிருக்கிறது என்பதை நாம் நினைவில் வைப்போமாக. அவர்களில் ஏறக்குறைய ஒவ்வொருவரும் நித்திய ஆக்கினையில் இருப்பார்கள் என்று அவர்களது புகழ்பெற்ற மத போதகர்களாலும் ஊசிப்போன விசுவாச அறிக்கைகளாலும் சொல்லப்பட்டிருக்கிறார்கள். எனினும் இது இனி வெளியரங்கமாக புத்திசாலிகளுக்கு போதிக்கப்படாததாக இருந்தாலும், இனி இது நம்பப்படாததாக இருந்தாலும் குற்றம் சாட்டப்படுதல் அடிக்கடி குறிப்பாக சொல்லப்படுகிறது. மரணத்திற்கு பிறகு ஏதோ பயங்கரமான ஒன்று காத்திருக்கிறது என்கிற இரகசியமான பயம் ஒளிந்து கொண்டிருக்கிறது. ரோமன் கத்தோலிக்க சபையின் உத்தரிக்கும் ஸ்தலம் அல்லது புரட்டஸ்டன்ட் சபையின் நித்திய ஆக்கினியைப் பற்றிய மிக மோசமான கொடூரம். தற்காலத்தின் போக்கு போதையுடனான சந்தோஷம் மற்றும் மது போதையின் பக்கம் சென்று அதன் பலனால் பயங்கரமான எச்சரிப்புகளிலிருந்து விடுபட முயற்சிக்கிறார்கள். மகிழ்ச்சிகரமான சந்தோஷமான எண்ணங்களை மாற்றாக வைக்கிறார்கள்.

உலகத்தின் விசேஷித்த தேவையை வேதாகமம் மட்டுமே கொடுக்க முடியும். வேத வாக்கியங்களின் இந்த ஆறுதலை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தும் தகுதியை வேத மாணவர்கள் மட்டுமே பெற்றிருக்கிறார்கள். ஆகையால் மேலும் நாம் வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களிடமும், மனமுடைந்தவர்களிடமும் காயங்கட்டுதலை செய்யும்படி நாம் அவர்களிடம் இப்படியாக கூறுவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். ''கிறிஸ்துவிடம் வந்து, விடுதலையையும், இளைப்பாறுதலையும் பெறுங்கள். தம்மை பின்பற்றுகிறவர்களுக்கு சுமை சுமக்கிறவர் யார் என்று இப்பொழுது வந்து பாருங்கள். பிதாவானவரின் கிருபையான ஏற்பாடுகளுக்கு இசைவாக கிறிஸ்து கடைசியாக திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதத்தை எப்படி எல்லா இடங்களிலும் பரப்பச் செய்வார் என்கிற பின்னர் வரக்கூடிய காரியத்தை பாருங்கள். நம்மை கட்டுப்படுத்துகிற தேவனுடைய அன்பை பாருங்கள்! அவரைப் பற்றிய பயத்தை கைவிடுங்கள்! கிறிஸ்து மூலம் தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்.''

மேசியாவின் மகிமையான ஆளுகைக்கு முன்னதாக வருகிற ஆபத்தின் காலத்தைப் பற்றி சொல்லக்கூடிய சரியான காலம் இருப்பது போல தன்னிச்சையாக நடப்பவர்களிடம், பாவம் செய்கிறவர்கள் பாடுபடுவார்கள் என்பதைப் பற்றியும், பாவ வழியில் நடக்கிறவர்கள் தேவனுக்கு தூரமாக நடக்கிறார்கள் என்பதைப் பற்றியும், அந்த வழியின் முடிவு மரணம், இரண்டாம் மரணம் என்பதைப் பற்றியும் ''மனிதன் எதை விதைத்தானோ அதையே அறுப்பான்'' என்பதைப் பற்றியும் சொல்லக்கூடிய சரியான நேரம் இருக்கும். ஆனால் தெய்வீக வார்த்தையின் இந்த அம்சங்கள் ஒவ்வொரு நாளும் திரும்ப திரும்ப சொல்லப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் பாவமானது ஒரு விதமான பாடுகளுக்கு வழி

நடத்தும் என்பதையும், நீதியானது சீக்கிரத்திலோ, பிற்பாடோ பரிசை கொண்டு வரும் என்பதையும் இயற்கையாகவே மனுக்குலம் அறிந்திருக்கிறது.

உலகத்திற்கு அதிகமாக தேவைப்படுவது என்னவென்றால், பாவத்திலிருந்து மனந்திரும்புவதற்கான உற்சாகமூட்டுதல், பாவம் செய்த ஆதாமின் சந்ததியின் மேல் தேவனுடைய தயவை தெளிவாக உணருதல் மற்றும் தேவன் செய்திருக்கிற ஏற்பாடுகளையும் இதனால் கிறிஸ்துவின் மூலம் அனைவரிடமும் தயவை காண்பிப்பார் என்பதை அறிவதும் ஆகும். நமது ஆண்டவர், ''உங்கள் கண்கள் காண்கிறதினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்'' என்று அறிவித்திருக்கிறார். நாம் அவரது மார்க்கத்தை பின்பற்ற வேண்டியது அவசியம். எப்படிப்பட்ட ஆசீர்வாதத்தை காண்கிறவர்களும் கேட்கிறவர்களும் அனுபவிக்கிறார்கள் என்பதை நாம் அவர்களுக்கு சொல்ல வேண்டியது அவசியம்.

இயேசுவின் பின்னடியார்கள் எடுக்க வேண்டிய சுயபலி. சுயத்தை வெறுத்தல் மற்றும் பாடுகள் அடங்கிய இடுக்கமான பாதையைக் குறித்தும் சில நேரங்களில் சொல்ல வேண்டியது அவசியம். இதனால் அவரது ராஜ்யத்தில் கனம், மகிமை மற்றும் சாகாமையில் பங்கு பெறுவார்கள் என்பதையும் சொல்ல வேண்டும். ஆனால் நாம் சொல்லாமல் இருந்தால் கூட அவர்கள் பாதையின் இடுக்கத்தை கண்டு கொள்வார்கள். ''நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்'' என்ற கூற்றின் சத்தியத்தை அறியாமல் யாரும் இடுக்கமான பாதையில் நடக்க முடியாது, இயேசுவை பின்பற்ற முடியாது.

பிறகு ஜனங்களிடம் நாம் என்ன சொல்லுவோம்? நம்பிக்கையின் செய்தியையும், சந்தோஷத்தின் செய்தியையும், சமாதானத்தின் செய்தியையும் அவர்களுக்கு கொடுங்கள்! நாம் அடிக்கடி வழியின் இன்னல்களையும் சோதனைகளையும் குறிப்பிடாதபடி. ஆசீர்வதிக்கப்பட்ட சிலாக்கியங்கள் நம்முடையது என்பதில் சகோதரர்களின் கவனத்தை இழுப்போமாக. அநேக உபத்திரவங்களின் வழியாக அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்றால், கிறிஸ்தவனுக்கு கிடைக்கும் சலுகைகள் என்ன? ஓ! அவைகள் மகா பெருமையானவைகள். பாவங்கள் மன்னிக்கப்படுத்துவதை அறிவது அவனுடையது. இதை மறுபடியும் மறுபடியும் கூறுவது அவசியமானது. அதை அவர்கள் முழுவதுமாக சரியானபடி உணர்ந்து கொள்வார்கள். பரலோக பிதாவின் அன்பையும் அக்கறையையும் அறிவது அவனுடையது. ஏனெனில் வாழ்க்கையின் அழுத்தத்தில் காரியங்கள் சுலபமாக மறக்கப்படும். இந்த வசனத்தின் உறுதிமொழிகள் திரும்பத்திரும்ப சொல்லப்பட வேண்டும். ''தேவன் தாமே உங்களை நேசிக்கிறார்''. ''தேவன் நமக்காக இருக்கிறார்.'' ''தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது.''

தேவனுடைய வசனத்தின் இந்த வாக்குத்தத்தங்கள் நம் உள்ளத்தில் ஏராளமாக இருப்பதால், அவைகள் பரிசுத்த ஆவியின் கனிகளை விருத்தி செய்கிறது. உலகம் கொடுக்க முடியாததும் எடுக்க முடியாததுமான சந்தோஷமும் சமாதானமும் உள்ளே வருகின்றன. சகல மனித புரிந்துகொள்ளுதலையும் கடந்த தேவ சமாதானம் இப்படியாக மேலும் நமது இருதயத்தில் வாசம் செய்ய வரும். ஆகையால் நன்றியான பலன்கள், இதையொட்டி நன்றியானது அதிக சந்தோஷம் மற்றும் புகழ் மற்றும் நமது சகோதரர்களுக்கும், நமது குடும்பத்திற்கும், உலகத்திற்கும் அதிகமான தயவுக்கும் வழிநடத்தும். இப்படியாக கிறிஸ்தவன் கிருபையிலும், அறிவிலும் அன்பிலும் தான் வளருவதை காண்கிறான்.

### ''இவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்''

இவைகள் எல்லாம் பரிசுத்த பவுலின் புத்திமதிக்கும் மிகவும் இசைவாக இருக்கிறது. ''உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.'' (பிலிப்பியர் 4:8) இந்த மார்க்கத்தை பின்பற்றி சுவிசேஷத்தின் நம்பிக்கையை போதித்து, நாம் ஆண்டவரையும் அப்போஸ்தலர்களையும் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் நம்பிக்கை, எதிர்பார்ப்பு, தன்னம்பிக்கை, அன்பு, சந்தோஷம் மற்றும் சமாதானத்தின் ஆவியை அதிகமாக பெற்றிருந்தார்கள்; அதையே அவர்கள் செய்தார்கள். அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் பாடுகளில் பங்குபெற பாத்திரராக இருந்தார்கள் என்பது பற்றியும், கிறிஸ்துவின் வரக்கூடிய மகிமைகளில் பங்கு பெறுவார்கள் என்பது பற்றியும், ஸ்தோத்திரப் பாடலை தேவனை நோக்கி பாடினார்கள்.

அன்பான சகோதரரே, உலகமானது கண்ணீரிலும் அதிகமான துன்பத்திலும், அதிகமான பயத்திலும் இருப்பார்கள் என்பதை நாம் உணர்வோமாக. பரிதாபகரமான உலகமானது அதன் மன வேதனையிலிருந்து விடுபட நமது நேரம், பலம், திறமைகள் சந்தோஷங்கள் முதலானவைகளை மேன்மேலும் பயன்படுத்துவோமாக. இயேசுவின் வார்த்தைகளை கவனித்து கேளுங்கள். ''அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்.'' ''பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.'' கிறிஸ்து மூலமாகவும் சபையின் மூலமாகவும் பூமியின் கண்ணீரைத் துடைப்பது தேவனுடைய எதிர்கால மகா வேலையாக இருப்பதினால், நாம் தற்காலத்தில் அவர்களில் சிலரது பயத்தை போக்குவோமாக. இப்படியாக விரைவில் உலகத்தை தேவனுடைய ஐக்கியத்துக்குள் கொண்டு வருவதற்கான வழியை ஆயத்தம் பண்ணுவோமாக. ஏனெனில் தற்கால விசுவாசிகள் இயேசுவின் அடிச்சுவட்டில் நடந்து, நல்ல வழியில் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.


ஏழாம் சபையின் தூதனாகிய

**சகோ. C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :

**சகோ. R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை

எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.

கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**